www.padippakam.com

CENCE No. TN/MS (N) / WPP-100

விலை 3-00 ரூபா

# ஈழ சுதந்திரன்

## ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
௨௦௨௮
வைகாசி-ஆனி

புத்தகம்: 10 இதழ்: 7

ஜூன்-1997

∴ சிங்கக் கொடி ஏற்றுவதும், சிங்களப் பெயர் சூட்டுவதும் புலிகளிடமிருந்து தமிழ்மக்களை விடுவிப்பதாகுமா?

∴ தெற்கிலும் வடக்கிலும் தமிழ்மக்களை நகரவிடாமல் முடக்கி அழிப்பது அவர்களுக்கு நலன் விளைவிப்பதாகுமா?

## சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்த

# இந்தியா தலையிடுக



ஈழத்துக் காந்தி தந்தை செல்வா நூற்றாண்டுத் தொடக்க விழாச் சிறப்புரையாற்றுகிறார் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்.

### ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் கோரிக்கை

சிறீலங்காவின் தனிச்சிங்கள ராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும் என்று ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் கோரியுள்ளது. இதுபற்றி அதன் அறிக்கை வருமாறு:

கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் சிறீலங்கா அரசு நடத்தும் அகதி முகாம்கள் கூட தமிழ் மக்களுக்கு சித்திர வதைக் கூடங்களாகவே விளங்குகின்றன.

எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாமல், உணவுக்கும் குடிநீருக்கும் கூட உத்தரவாதமில்லாமல் அந்த அகதி முகாம்களில் தமிழ் மக்கள் ஆடுமாடுகளைப் போலவே அடைத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் தரும் கொடுப்பனவுகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு முற்றாகப் பற்றுவதில்லை. அண்டை அயலில் போய் வேலை செய்து பிழைக்கலாமென்றால் இராணுவத்தினரின் அட்டகாசங்களால் ஈழத் தமிழ் மண்ணே சுடுகாடாக மாறிக்கிடக்கிறது.

விவசாயமில்லை, தொழில் இல்லை, மீன்பிடியில்லை, வியாபாரமில்லை என்கிற போது மக்கள் எங்கே போய் வேலை செய்வது? எப்படிப் பொருளீட்டுவது?

#### ராணுவக் கெடுபிடி

தென்னிலங்கைக்குப் போகலாம் என்றால், இராணுவம் அனுமதிப்பதில்லை. தலைநகர் கொழும்புக்கே இராணுவத்தின் அனுமதி பெற்று இரண்டொருநாள் தான் போய்வர முடியும். அந்த அனுமதியும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. கிடைத்து கொழும்பு செல்பவர்களுக்கும் அங்கேயும் ஏகப்பட்ட கெடுபிடிகள், காவல் துறையின் அடக்குமுறைகள்.

சரி; இந்தியாவுக்குச் சென்று அங்கு அகதிகளாகத் தஞ்சம் பெறலாமென்றால் அதற்கும் சிங்கள ராணுவம் விடுவதில்லை. ஒளிந்து மறைந்து படகு பிடித்துச் செல்வோருக்கும் இந்திய மண்ணை மிதிக்கிற வரை உயிருக்கு உத்தரவாதமில்லை. இந்திய மீனவர்களையே நடுக்கடலில் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுத்தள்ளும் சிங்களக் கடற்படையினர் ஈழத்தமிழர்களை விட்டு வைப்பார்களா?

எங்கு தான் புகலிடம் என்று கேட்டால் யாழ்ப்பாணத்திற்கு போங்கள் என்கிறது சிங்கள ராணுவம். சிங்கள ராணுவத்தின் ஆக்கிரமிப்பின் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் மீண்டும் தாங்களாகவே யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்து விட்டார்கள் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக அப்படிச் செய்கிறது சிங்கள ராணுவம்.

#### இதுவா விடுதலை

ஈழத் தமிழ் மண்ணில் சிங்கள ராணுவம் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை புலிகளிடமிருந்து விடுதலை பெற்றுத் தருவதற்கான பணிகள் என்று வர்ணிக்கின்றன சிங்கள ராணுவமும், சிறீலங்கா அரசும்.

(11-பக்கம் பார்க்க)

### வடபகுதிக்கு தினமும் பயணிகள் கப்பல் சேவை!

வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவை தற்போது தினசரி நடைபெறுகிறது. இதனால் தனிப்பட்ட பயணிகள், காலதாமதமின்றி பயணத்தை திருகோணமலைக்கு மேற்கொள்ள முடிகிறது என்று பட்டணமும் சூழலும் பகுதிக்கான பிரதேச செயலாளர் வி. வேலும் மயிலும் தெரிவித்தார்.

தனிப்பட்ட பயணிகளுக்கான இருக்கை வசதிகளுடன் கூடிய கப்பல் பயணக் கட்டணம் ரூ. 750 சரக்கு கப்பல் பயணம் செய்வதாயின் 600 ரூபா மட்டுமே.



"வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரம் கொள் கூட்டம் இவர் உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினால் பலராய்க் காண்பார்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உணர்ச்சி பொங்கக் கூறியதுபோலக் குழுமியுள்ள பார்வையாளர்கள் பெருங்கூட்டம் சென்னை செல்வா விழாவில்.

**ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்**

www.padippakam.com



''நல்லிணக்கம் அல்லது அல்லல்படுத்தும்''
—கொன்றை வேந்தன்

(''நல்லதை நாடி இணங்காமல் நடந்தால் தொல்லைகள் தொடர்ந்து துன்பத்தைக் கொடுக்கும்'')

# தெளிவு

## இனப்பிரச்சினை தீர்வுக்கு பிரிட்டன் வழிகாட்டுகிறது!

பிரித்தானிய நாட்டில் 18 ஆண்டுகளுக்குப் பிறகு தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்ட நாடுகளைப் பொறுத்த வரை இந்தியாவானாலும், இலங்கையானாலும், பாக்கிஸ்தானானாலும் தொழிற்கட்சி ஆட்சியிலிருந்தபோது தான் விடுதலை வழங்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

இலங்கை இனச்சிக்கலுக்கு மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தின் கீழ், குறிப்பாக பிரிட்டனின் முயற்சியில் நல்ல தீர்வு ஒன்று காணப்படும் என்ற கருத்து மேலோங்கியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்குச் சுதந்திரமளித்த தொழிற்கட்சியே பிரிட்டனில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருப்பது மிக நல்ல அறிகுறியாகும்.

அது மட்டுமல்ல, இன்றைப் பிரித்தானிய அரசியலில் நிகழ்ந்திருக்கும் நல்ல முன்மாதிரிகள் இலங்கை ஆட்சியாளர்களின் கண்களைத் திறக்குமானால், அது தான் நன்மை விளைவதற்குத் துணை செய்வதாக இருக்கும்.

ஆம்; ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்திற்குச் சொந்தக்காரராயிருந்தது பிரித்தானியாவாகும். அந்த பிரிட்டன் தன்னுடைய சாம்ராஜ்ய நாடுகளுக்குச் சுதந்திரமளித்தது மாத்திரமல்ல. தன் நாட்டுக்குள்ளேயே வாழும் சகோதர தேசிய இனங்களுக்கு முழு உரிமை அளிக்க முன்வந்திருப்பது சிங்களப் பேரினவாதிகள் படித்துக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

1) இங்கிலாந்து 2) ஸ்கொட்லாந்து 3) வேல்ஷ் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்ட பிரிட்டன் ''ஐக்கிய அரசாட்சி (United Kingdom)'' என்று தன்னை அழைத்துக் கொள்கிறது. நாலாவது பகுதியாக வட அயர்லாந்தும் சேர்ந்திருப்பதால் இப்பெயர் அதற்குப் பொருந்துவதே.

பிரிட்டன் என்றதுமே நமக்கு ஆங்கிலமொழியும் கலாச்சாரமும்தான் நினைவுக்கு வரும். என்றாலும் அதன் இந்த நான்கு பகுதிகளும் வெவ்வேறு மொழி இனத்தேசிய அடிப்படைகளைக் கொண்டதாகும்.

பொதுவாக பிரித்தானியர்கள் ஆங்கிலம் பேசினாலும் ஸ்கொட், வேல்ஷ், ஐரிஷ்மொழிப் பகுதிகளைச் சேர்ந்தவர் தங்கள் தனிமொழி இன அடையாளங்களைப் பேணியே வருகின்றனர். அவற்றின் உரிமைக்கான போராட்டங்களிலும் ஈடுபட்டே வருகின்றனர்.

''எல்லாருக்கும்தான் ஆங்கிலம் தெரியுமே! பிறகு எதற்கு இந்தப் போராட்டங்கள்?'' என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அவர்களை அழிக்க முற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள் எல்லாம் ஒரேமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் கூட அப்போராட்டங்கள் அலட்சியப்படுத்தப்படவில்லை.

புதிய தொழிற்கட்சி ஆட்சி அவர்களின் கோரிக்கைகளை ஏற்று ஸ்கொட்லாந்துக்காரர்கள் தங்களுக்கெனத் தனிப் பாராளுமன்றத்தை அமைத்துக்கொள்ளவும், வேல்ஷ்காரர்கள் தங்களுக்கெனத் தனிச் சட்டப்பேரவையை நிறுவிக்கொள்ளவும் உரிமை வழங்கியுள்ளது. வட அயர்லாந்தைப் பொறுத்தவரை 'சின்பீன்' (நாம் ஐரிஷ்) இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முன்வந்திருக்கிறது.

பிரிட்டன் அளவுக்கு ஒரே மொழி, ஒரே மதம் என்ற ரீதியில் இலங்கை அமையவில்லை. இங்கே தமிழ்மொழியும், இந்து மதமும் சிங்கள மொழியும், பௌத்த மதமும் தோன்றுவதற்கு முன்பிருந்தே இருந்து வருகின்றன.

இஸ்லாமிய மதத்தவரும் தமிழ்மொழி பேசுவோராகவே இருந்து வருகின்றனர்...............

அப்படியிருக்க, ஒரே மொழி சிங்களம், ஒரே மதம் பௌத்தம் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனைவது எப்படி நியாயமாகும்?

தமிழ்பேசும் மக்களின் மொழிக்கும் மதங்களுக்கும் முழு உரிமையளிக்க முன்வராமல் எவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

ஆனானப்பட்ட ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிமரமான பிரிட்டனே தன் நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு முழுத் தன்னுரிமையளிக்க முன்வந்திருக்கிற போது இலங்கையிலும் அதுபோன்று செய்யாமல், இராணுவத்தைக் கொண்டு தமிழ் மக்களை ஒடுக்கவும், அழிக்கவும் முற்படுவது என்ன நியாயம்?

பிரித்தானியர் கொடுத்த சுதந்திரத்தைக் கொண்டு இலங்கையை ஆண்டுவரும் சிங்களப் பேரினவாதிகள், பிரித்தானியர் அவர்கள் நாட்டில் கடைப்பிடித்திருக்கும் இந்த வழியைப் பின்பற்றாமல், ஒருக்காலும் இலங்கை சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது.

பிரிட்டனின் புதிய பிரதமர் டோனிபிளேர், சிறிலங்கா வின் அதிபர் சந்திரிகா இனப்பிரச்சினையை எவ்வாறு கையாளவேண்டும் என்பதற்கு வழிகாட்டியிருக்கிறார்.

அந்த வழியில் சென்று தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதே இலங்கை இனப் பிரச்சினையின் தீர்வுக்கு வழிவகுக்கும். இதைச் சுட்டிக் காட்டி இந்தியாவும் சிறிலங்காவை நிர்ப்பந்திப்பது இன்றியமையாததாகும்.

## வலையிறவு பாலத்தை காலை 7-30முதல் மாலை 5-30 வரை திறப்பதற்கு அனுமதி

மட்டக்களப்பு நகரிலிருந்து வவுணதீவு பிரதேசத்திற்கு சென்றுவர வலையிறவு பாலத்தை காலை 7-30 மணியிலிருந்து பி ப. 5-30 மணி வரை திறப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இதுவரை காலமும் காலை 9 மணி முதல் பி. ப. 4 மணிவரையே பயண அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச சபை பிரதிதவிசாளர் இ. நாகலிங்கம் புளொட் அரசியற் பொறுப்பாளர் ராஜிமாமா, மாநகர சபை பிரதி முதல்வர் பெனடிக் தனபாலசிங்கம், போரதீவுப் பற்று பிரதேசதவிசாளர் நவரத்தினராசா ஆகியோரும் இராணுவத்தினர் தரப்பில் பாதுகாப்பு இணைப்பதிகாரி கேணல் நிமால் ஜெயசூரிய, வில் இணைப்பதிகாரி கேணல் தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வவுணதீவு சாளம்பைக் கேணி கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படும்.

வவுணதீவு பிரதேசத்திலிருந்து நகருக்கு மாதத்திற்கு மூன்று தடவைகள் ஒவ்வொரு உழவு இயந்திரம் வந்து எரிபொருளை பெற்றுச் செல்ல அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வவுணதீவு பிரதான பாலத்தில் வைத்து சோதிக்கப்படும் பொதுமக்கள் சுமார் 300 மீற்றர் தூரத்திற்கப்பால் சிறிய பாலத்திலும் பரிசோதிக்கப்படுவதால் அரசு ஊழியர்கள் பொது மக்கள் சிரமங்களை எதிர் நோக்குவதாக புளொட் தூதுக்குழுவினர் சுட்டிக் காட்டியபோது இது தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதாக பாதுகாப்பு இணைப்பதிகாரி உறுதியளித்தார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து வவுணதீவு வரை பஸ் சேவைக்கு அனுமதி வழங்கவும் பிரத்தியேக தனியார் பஸ் வண்டிகள் சேவையை மேற்கொள்வதில் ஆட்சேபனை இல்லையென்றும் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்தனர்.

அத்தோடு குறிஞ்சா முனையில் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட கட்டாக்காடு பாலத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை அடுத்து உரிய நடவடிக்கை எடுக்க உறுதியளிக்கப்பட்டது.

## தமிழக சஞ்சிகைகளில் ஈழத்துச் செய்திகள்

### தனி ஈழம் குறித்து பேச வேண்டாம்

தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தமிழீழப் பிரச்சனையில் மோடி மஸ்தான் மாதிரி நடந்து கொள்கிறார்கள். ஓட்டுக்காக மிக மிகக் கேவலமாக நடந்து கொள்கின்றனர். இந்த அரசியல் கட்சிகளைத் தமிழக மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள். இங்கிருக்கின்ற இவர்கள் தனி ஈழம் குறித்து பேச வேண்டாம். தமிழீழ மக்களுக்கு உணவு மருந்து அமைதியாக வாழ இடம் இது குறித்து மட்டுமாவது பேசுங்கள்.

மே-15-91 ''நந்தன்'' இதழில் டாக்டர் ராமதாஸ் சிறப்புப் பேட்டியில் இருந்து.

❖ ❖ ❖

### குஜ்ரால் என்ன செய்யப் போகிறார்?

தமிழ்நாட்டு மீனவர் 3 பேரை சென்ற வாரம் சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றிருக்கிறது தமிழ்நாட்டு மீனவர்களை சிங்கள இராணுவம் சுட்டுக் கொல்லுவது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இலங்கைக்குப் போய் கொலைகாரச் செயல்களுக்கு மறைமுக ஆதரவு ஆதரவு அளித்தவர் குஜ்ரால். புலிகள்-இலங்கை அரசு போரில் நடுநிலை வகிப்போம் என்று அறிவித்தவர் குஜ்ரால். இப்போது தமிழ் நாட்டு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இப்போதும் குஜ்ரால் நடுநிலை வகிக்கப் போகிறாரா? அல்லது இலங்கை அரசைக் கண்டிக்கப் போகிறாரா?

'ராணி' -25-5-97

## வவுனியா அகதிகளுக்கு புதுச்சிக்கல்

வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் 16 ஆயிரம் பேருக்கு உலர் உணவு வழங்கும் நடைமுறை ஆரம்பமானது.

கடந்த 15-ஆம் திகதியுடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒரு மாதத்துக்கு குடும்பத்துக்கு 331 ரூபாய் பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் நலன்புரி நிலையத்திலுள்ளோர் கஷ்டங்களுக்கு உள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

இது காலவரையும் தனியார் ஒருவருக்கு 250 ரூபாவும் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு 250 ரூபாவும் நாளொன்றுக்கு வழங்கப்பட்டது. உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதால் சமைத்து உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அதற்கான சமையல் பாத்திரங்கள் ஏனைய வசதிகள் இல்லாத நிலையில் இந்த நெருக்கடிக்கு தீர்வொன்று காணவேண்டுமென வவுனியா அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பேசாலை அகதி முகாமை மூடிவிட உத்தரவு

மன்னாரில் பேசாலை நலன்புரி நிலையத்தை மூடிவிடுமாறு படையினர் உத்தரவிட்டிருப்பதாக தெரிய வருகிறது.

யூ. என். எச். சி. ஆரின் மேற்பார்வையில் இயங்கும் இந்நிலையத்தில் 239 குடும்பங்களைச் சேர்ந்த 778 பேர் தங்கியிருக்கின்றனர். இந்த முகாமை உடனடியாக மூடிவிட முடியாதெனவும் 6 மாத காலத்துக்கு முகாமை நடத்த வேண்டுமெனவும் யூ என்.எச்.சி. ஆர் நிறுவன அதிகாரிகள் கூறியிருப்பதாகவும் இது தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அறிய வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# சென்னையில் தந்தை செல்வா நூற்றாண்டுத் தொடக்க விழா அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

## வரலாறு படைத்த இருநாள் நிகழ்ச்சிகள்



முன்னாள் இந்திய அமைச்சரும், இந்திய தேசிய காங்கிரசின் தமிழகத் தலைவருமான கே. வி. தங்கபாலு இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் நிறைவுரையாற்றுகிறார்.

ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் (PloTEG) சார்பில் ஈழத்துக் காந்தி தந்தை செல்வா அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க விழா 1997 ஏப்ரல் 25, 26ம் திதிகளில் சென்னை தியாகராய நகரில் உள்ள ஜெர்மன் அரங்கத்தில் இருநாள் முழு விழாவாக சிறப்போடு நடைபெற்றது. இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள ஈழ அகதித் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழக அரசு அமைத்துக் கொடுத்துள்ள அகதி முகாம்களில் குடியிருக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் தமிழக முழுவதிலும் இருந்து திரளாக வந்து தங்கள் தேசத் தந்தைக்கு அஞ்சலி செய்யும் முகமாக இரண்டு நாள் விழாக்களிலும் கலந்து கொண்டனர். அவர்களுடன் உள்ளூர் மக்களும் கணிசமான அளவு கலந்து கொண்டது விழாவுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக இருந்தது.

முதல் நாள் காலையிலேயே ஜெர்மன் அரங்கத்தில் செல்வா உருவப்படம் மாலையிட்டு, குத்து விளக்கேற்றி, மலர் சொரிந்து, அனைத்து மக்களும் அஞ்சலி செய்யக் கூடியதாக, தொடக்கி வைக்கப்பட்டது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை ஜெர்மன் அரங்கத்தில் மட்டுமன்றி சென்னை நுங்கம் பாக்கத்திலுள்ள ஐக்கப் மண்டபத்திலும், இராயப் பேட்டை சிறீனிவாசபுரத்திலுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திலும் தந்தை செல்வாவைப் பற்றிய பல்வேறு தலைப்புகளிலான கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் சற்குண பாண்டியன்

மாலை 4 மணிக்கு தமிழக அரசின் சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி சற்குண பாண்டியன் அவர்கள் விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த போது அகதித் தமிழ் மக்கள் இசை முழங்க அவரை வரவேற்றனர் அவர் பேசுகையில் ஈழத்துக் காந்தி செல்வா தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்களுக்கே ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து சென்றுள்ளார். அறிஞர் அண்ணாவும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் அவர் மீது அன்பு வைத்திருந்தார்கள். அவருடைய சனநாயகத் தன்மை காரணமாக இந்தியாவும் தமிழ் நாடும் ஈழத் தமிழ் மக்களுக்கு என்றுமே குரல் கொடுக்கத் தயங்கியதில்லை.

தமிழ் நாட்டுக்கு அப்பாற்பட்டு இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பதவி துறந்த பெருமையும் எங்கள் தலைவர்கள் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கும் உண்டு. தந்தை செல்வாவின் தியாகவுணர்வு காரணமாக அவர் மறைந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகும் இங்கே ஈழத்துத் தாய்மார்களும், இளம் பெண்களும் இளைஞர்களும் திரளாகத் திரண்டுள்ளீர்கள்.

அவர் காட்டிய வழியில் அறநெறியில் செல்லும் வரை உங்களுக்கு தமிழக அரசின் சமூக நலத்துறை மூலம் என்னாலான உதவிகளை தந்தை செல்வாவின் பெயரால் செய்து கொடுக்க நான் தயாராகவுள்ளேன் என்று குறிப்பிட்டார்.

கழக இசைக் குழுவினர் தந்தை செல்வா பற்றியும் அகதி நிலை பற்றியும் கண்ணீர்க்கானங்கள்பாட, பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. வே. கைலாய பிள்ளை வரவேற்புரை ஆற்ற, திரு சாம் கோயில்பிள்ளை தலைமை தாங்கக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

### டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி

இலங்கைத் தமிழர்களுக்கென தனித் தமிழீழம் அமைவதை யாராலும் தடுக்க முடியாது. ஒன்று தனித் தமிழீழம் அமைய வேண்டும் அல்லது இலங்கையை இந்தியாவின் இன்னொரு மாநிலமாக இணைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்காக உதவி செய்ய இங்கே 6 கோடி தமிழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் நானும் உங்களுக்காக எப்போதும் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

இவ்வாறு அக்கூட்டத்தில் முதன் முதலாக உரையாற்றிய அகில இந்திய ஜனதா கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சாமி குறிப்பிட்டார்.

### சென்னை முன்னாள் மேயர் சா. கணேசன்

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்புவதில் எங்களது திராவிட முன்னேற்றக் கழகமும், எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்களும் என்றுமே தயங்கியது கிடையாது. உங்களிடையே ஒற்றுமை ஏற்படுமானால் நீங்கள் உரிமை பெறுவதை யாராலும் தடுக்க முடியாது என்று டாக்டர் சுவாமியை அடுத்துப்பேசிய தி.மு.க. செய்தித் தொடர்பாளரும், சென்னை நகர முன்னாள் மேயருமானதிரு.சா. கணேசன் கூறினார்.

### பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் இல. கணேசன்

உங்கள் போராட்டத்தை நீங்கள் எந்த முறையில் நடத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லக் கூடாது. ஆனால் பாரதத்தின் விடுதலைப் போரை மனதில் கொண்டு ஒற்றுமையாகவும் வன்முறையற்ற முறையிலும், தந்தை செல்வாவின் வழியில் இலங்கைத் தமிழர்கள் தங்கள் போராட்டத்தை முன்னெடுத்தால் எங்கள் பாரதீய ஜனதா கட்சி என்றும் உங்களுக்குத் தோள் கொடுக்கத் தயாராக வுள்ளது. எதிர்க்கட்சியாகவுள்ள இன்றைக்கு மட்டுமன்றி நாளை ஆளும் கட்சியாக நாங்கள் வந்தாலும், நிச்சயம் வருவோம்; உங்களுக்கு மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் உள்ள இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் உதவி செய்ய எங்கள் பாரதிய ஜனதாக் கட்சி என்றும் முன்னிற்கும். இவ்வாறு, பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் பேசிய அதன் தமிழ் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. இல. கணேசன் குறிப்பிட்டார்.



தி.மு.க.செய்தித் தொடர்பாளரும், சென்னை மாநகர முன்னாள் மேயருமான சா. கணேசன் தந்தைசெல்வா நூற்றாண்டு தொடக்க விழாவில்உரையாற்றுகிறார்.

### காங்கிரஸ் (இ) கட்சியை சேர்ந்த பேராசிரியர் கிள்ளிவளவன்

எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கம், இலங்கைத் தமிழர் உரிமைகளுக்காக என்றும் குரல் கொடுத்து வந்துள்ளது. இலங்கைத் தமிழர்களில் சில பேர் உகப்பில்லாமல் நடந்து கொண்டாலும், மனிதாபிமான அடிப்படையில் உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் தயங்க மாட்டோம். என்றைக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு எமது இயக்கம் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு காங்கிரஸ் (இ) கட்சியின் முன்னாள் செய்தி தொடர்பாளர் பேராசிரியர் தி.சு. கிள்ளிவளவன் குறிப்பிட்டார்.

### தமிழ் மாநில முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் ஹாஜி எஸ். எம். கனிசிஸ்தி

இலங்கையில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகிய அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் ஓரணியில் திரட்டிய பெருமை தந்தை செல்வாவிற்குண்டு. புதிய தலைமுறையினர் அவருடைய வழியில் சென்றால் வெற்றி காணமுடியும். இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் நலனிற்கு இந்தியாவிலுள்ள 20 கோடி முஸ்லிம்களும் என்றும் துணையாக இருப்பார்கள். இவ்வாறு தமிழ் மாநில முஸ்லிம் லீக் பொதுச்செயலாளரான ஹாஜி எஸ். எம். கனிசிஸ்தி பேசுகையில் கூறினார்.

### இந்திய குடியரசுக் கட்சி டாக்டர் அ. சேப்பன்

இந்தியாவிலுள்ள தலித் மக்கள் தந்தை செல்வாவின் மூலமே ஆதர்சம் பெற்றவர்களாவர். இலங்கையின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாத் துறையிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக தேர்தலில் தோல்வியைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் உழைத்தவர் தந்தை செல்வா என்பதால் அவருடைய வழியில் செல்லும் இலங்கைத் தமிழருக்கு இந்தியாவிலுள்ள தலித் மக்கள் அனைவரும் எல்லா வகையிலும் துணை நிற்பர் என்று இந்திய குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அ. சேப்பன் பேசுகையில் கூறினார்.

### ஜனதா தளத்தின் தமிழ்மாநிலப் பொதுச்செயலாளர் திரு. இதயவண்ணன்

எங்கள் தலைவராகிய இன்றைய பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினையை நன்றாக அறிந்தவர். எனவே அவருடைய காலத்தில் இந்தியாவின் மூலம் உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து உதவிகளையும் நிச்சயமாகச் செய்வார். ஜனதா தளத்தைச் சேர்ந்த நாங்கள் அதற்கு என்றும் உழைப்போம் என்று ஜனதா தளத்தின் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான திரு. இதயவண்ணன் பேசுகையில் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தந்தை செல்வா நூற்றாண்டுவிழா தலைவர்கள் புகழாரம்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

### ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி வீ. ராஜ்மோகன்

அதிகாரங்களைத் துச்சமாகமதித்தஅரசியல் தலைவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் தந்தை செல்வா அவர்கள். எனவே அவருடைய இலட்சியம் இலங்கையில் நிச்சயம் வெற்றி பெறும். இங்குள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரும் பிரச்சினை தீர்ந்து விரைவில் நாடு திரும்புகிற சூழ்நிலை உருவாக நாங்கள் துணை நிற்போம். இவ்வாறு ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளரான தோழர் வீ. ராஜ்மோகன் பேசுகையில் குறிப்பிட்டார்.



தந்தை செல்வா நூற்றாண்டுத் தொடக்க விழாவில் பா.ம.க. சார்பில் அதன் தலைவர் பேராசிரியர் தீரன் எம்.எல்.ஏ. உரையாற்றுகிறார்.

### இரண்டாம் நாள் (26-ம் திகதி ஏப்ரல் 1997) நிகழ்ச்சி

காலை 10 மணி அளவில் தமிழீழப் பண்ணுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகள் மாலை 5 மணி வரை நடைபெற்றன. தமிழீத் தந்தை செல்வா பற்றிய கலந்துரையாடல்கள், கலை நிகழ்ச்சிகள், அகதிகள் எதிர் கொள்கின்ற சிக்கல்கள் பற்றிய கருத்தரங்குகள் இடம் பெற்றன.

மாலை 6 மணி முதல் இரவு 10-30 மணிவரை தந்தை செல்வா அவர்களைப் பற்றியும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாகவும், அரசியல் கட்சித் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செயலாளர் செல்வி சி. சூரியகுமாரி வரவேற்புரையாற்ற, முனைவர் திரு. அரு.கோபாலன் தலைமையில் கழக இசைக் குழுவினரின் உணர்வுப் பாடல்களுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

### இலங்கை மலையக மக்களின் தாயகம் திரும்பியோர் அமைப்பு திரு. தேவதாஸ்

இந்திய வம்சாவளியினரான மலையக மக்களின் உரிமைகளுக்காக முதன் முதலாகக் குரல் கொடுத்த பூர்வீக இலங்கைத் தமிழர் தந்தை செல்வா அவர்கள் தான். அவருடைய தலைமையில் இலங்கையின் பூர்வீகக் குடிகளான ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இஸ்லாமியத் தமிழர்களும், ஒன்றுபட்டு நின்றிருந்தால், எமக்கு எப்போதோ விடிவு பிறந்திருக்கும் என்றுஇலங்கை மலையக மக்கள் சார்பில் முதலில் பேசிய திரு. தேவதாஸ் கூறினார்.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் திரு. இராமகிருஷ்ணன்

இலங்கையில் இடதுசாரி கட்சிகளையும் ஒருங்கிணைத்து தமிழர்களின் உரிமைகளையும் வென்றெடுக்க ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் தந்தை செல்வா ஆவார். தமிழகத்தில் உழைக்கும் மக்கள் வர்க்கம் என்றைக்கும், இலங்கைத் தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் தோழர் இராமகிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திரு.ஏ. எம். கோபு

தந்தை செல்வா 1971-ம் ஆண்டு தமிழகம் வந்து அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களை எல்லாம் சந்தித்துப் பேசியதை நினைவு கூர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு உறுப்பினர்களில் ஒருவரும், 'ஜனசக்தி' வார இதழின் நிர்வாக ஆசிரியரும், தொழிற் சங்கத் தலைவருமான தோழர் ஏ. எம். கோபு இலங்கையிலுள்ள கம்யூனிஸ்டுகளும், இந்திய கம்யூனிஸ்டுகளும் இணைந்து ஈழத் தமிழர்களுக்கான நியாயமான உரிமைகளுக்காக என்றும் துணை நிற்போம் என்று கூறினார்.

### தேசிய லீக் பொதுச் செயலாளர் அப்துல் லத்தீப் எம்எல்ஏ

தந்தை செல்வா எடுத்த எடுப்பிலேயே தனிநாடு கோரியவர் அல்ல. அவருடைய நோக்கம் இலங்கையில் சிங்களவருக்கும், தமிழருக்கும் ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு இணைப்பாட்சியைப் பெறுவதாகவே இருந்தது. அந்த நோக்கம் நிறைவேறுவதன் மூலமே இலங்கையில் அமைதியைக் கொண்டு வரமுடியும். இந்த அமைதிக்கு, இந்தியா வழி செய்யவேண்டும் என்பதே செல்வா நூற்றாண்டு விழாவில் எம்முடைய கோரிக்கை என்று தேசிய லீக்கின் பொதுச் செயலாளரும், பன்மொழிப் புலவருமான ஷம்ஷேரே மில்லத் அப்துல் லத்தீப் எம். எல் ஏ. பேசுகையில் கூறினார்.

### எம்.ஜி.ஆர்.மன்றப் பொதுச்செயலாளர் டாக்டர் ஜெகத்ரட்சகன்

1971ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்திருந்த தந்தை செல்வா எம். ஜி ஆரைச் சந்தித்தது பற்றியும் எம். ஜி. ஆர் அரசு ஈழத் தமிழர்களுக்கு செய்து கொடுத்த பல்வேறு உதவிகள் பற்றியும் குறிப்பிட்டு எம். ஜி. ஆரின் உண்மைத் தொண்டர்களாகிய நாங்கள் ஈழத் தமிழர்களுக்கு என்றும் உதவியாக இருப்போம் எனக் கூறினார். எம். ஜி. ஆர் மன்றத்தின் பொதுச் செயலாளரும், பிரபல கல்வியாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் சகத்ரட்சகன்.

### பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர், தீரன் எம் எல் ஏ

பாலஸ்தீன விடுதலை, நமீபிய விடுதலை, வங்கதேச விடுதலை ஆகியவற்றிற்கெல்லாம் மனமுவந்து உதவிய இந்தியா இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்கு உதவி செய்யத் தயங்குவதும், பல்வேறு நாட்டு அகதிகள் இந்தியாவில் சகல வசதிகளோடும் வாழ்ந்திருக்க இலங்கைத் தமிழ் அகதிகளிடம் மட்டும் பாராமுகமாக நடந்து கொள்வதும் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுடன், எமது பாட்டாளி மக்கள் கட்சி தந்தை செல்வா புகழ் பரப்பவும், ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்கு குரல் கொடுக்கவும் என்றும் முன்னிற்கும் என்றும் உறுதிபடக் கூறினார், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் தீரன்.

### இந்திய தேசிய காங்கிரஸின் தமிழ் மாநிலத் தலைவர் கே.வி. தங்கபாலு

இவ்விழாவில் பங்குபற்றிய தமிழக கல்வி அமைச்சரும், தி.மு.க. பொதுச் செயலாளருமான மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வேறு அவசரப் பணிகாரணமாக முன் கூட்டியே பேசிவிட்டுச் செல்ல நேர்ந்ததால், விழாவின் நிறைவுரையை இந்திய தேசிய காங்கிரசின் தமிழ் மாநிலத் தலைவரும், நியூயார்க்கில் நடந்த முதல் உலகத் தமிழீழ மாநாட்டில் பங்கு கொண்டவருமான திரு.கே.வி.தங்கபாலு, தலைமைத்துவம் மற்றும் தகவல் தொடர்பு பயிற்சியில் முதல் மூன்று இடங்களில் சித்தி பெற்ற மூவருக்கு பரிசுகளை வழங்கிச் சிறப்பாக ஆற்றினார் அவர் பேசுகையில்: காங்கிரஸ் பேரியக்கம் இலங்கைத் தமிழர்களை அன்னியராகப் பார்க்கவில்லை. அன்னை இந்திரா காந்தி காலத்திலும், அமரர் ராஜிவ் காந்தி காலத்திலும், இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியஅரசின்மூலம் கிடைத்த உதவிகளும், ஒத்துழைப்புக்களும் தொடர்ந்து கிடைக்க எமது இயக்கம் பாடுபடும் என்று கூறி, தந்தை செல்வாவின் புகழ் பரவினார், முன்னாள் மத்திய அமைச்சரும் தற்போதைய காங்கிரஸ் (ஐ) இன் தமிழ் மாநிலத் தலைவருமான திரு. கே.வி. தங்கபாலு.

### மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகன்

விழாவின் முடிமணியாக ''இலங்கைப் பாராளுமன்றத்தில் தந்தை செல்வா ஆற்றிய எழுச்சி உரைகள்'' என்ற நூலை வெளியிட்டும், 'தலைமைத்துவம் மற்றும் தகவல் தொடர்பு' பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கியும் தமிழகக் கல்வியமைச்சர் பேசினார். அவர்வெளியிட்ட நூலின் முதல் மூன்று படிகளை முறையே செல்வி சூரியகுமாரி, வே. கயிலாயபிள்ளை, டாக்டர் சண்முகநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் பேசியதாவது: அறவழியில் பல வருடங்கள் போராடியும் நியாயம் கிடைக்காத நிலையில் தமிழர் தன் மானத்தோடு பாதுகாப்புடன் வாழ தனித் தமிழீழம் அமைவது தான் ஒரே தீர்வாகும் என்பதே தந்தை செல்வாவின் இறுதி முடிவாகும். இலங்கையில் சிங்களவரோடு தமிழர்கள் இணைந்து வாழ முடியாது என்ற நிலை சிங்களரால் உருவாக்கப்பட்டபோது ஒரே அரசின் கீழ் சம உரிமை வாய்ப்புள்ள இரு மாநிலங்கள் அமைவதற்காக சனநாயகரீதியில் அரும்பாடுபட்டு சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்தார். ஆனால், மாறிமாறி பதவிக்கு வந்த பண்டா-டட்லி அரசுகள் பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் என ஏமாற்றி தமிழின அழிப்பு முயற்சிகளில் ஈடுபட்டன. எனவே தமிழின மக்களைக் காப்பாற்றி அவர்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்குத் தனிநாடுதான் ஒரே வழி எனத் தீர்மானித்தார். இலங்கையில் இருந்த தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் இணைத்து தமது கருத்தினை தெரிவித்து, அனைத்துக்கட்சிகளும் தமிழருக்கு தமிழீழம் தேவை என்பதை சனநாயக வழியில் ஏற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தினார்.

ஈழம் என்ற பெயரை உலகறியச்செய்த பெருமை தந்தை செல்வா அவர்களுக்கே உண்டு. இலங்கையில் பல் துறையில் ஆற்றல் படைத்த

(10ம் பக்கம் பார்க்க)



திரு. கோயில் பிள்ளை, திருமதி நிர்மலா சந்திரகாசன் வீற்றிருக்க தமிழ் மாநில முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் ஹாஜி எஸ். எம். கனி சிஸ்தி உரையாற்றுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



# பிரிட்டனின் முயற்சி வெற்றி பெற நல்ல வாய்ப்பு இருக்கிறது

## த. வி. கூட்டணி எம்.பி. நம்பிக்கை

அரசுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையேபரிமாறப்பட்ட கடிதங்களில் இனப் பிரச்சினை தொடர்பாக முக்கியமான திருப்பங்களைக் குறித்து எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியப்படுத்த ஜனாதிபதி இணங்கியுள்ளார். சமாதானம் குறித்த தமிழ் ஈழ விடுதலைப் புலிப்படையினருடன் பேச்சுவார்த்தைகள் நடந்த அரசு எதிர்காலத்தில் எடுக்கும் எந்த முயற்சிக்கும் தடங்கலாக இருக்கப் போவதில்லையென எதிர்க்கட்சித் தலைவர் உறுதி வழங்கியுள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாளர்களுடன் பேசிய வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு குறுகிய அறிக்கை ஒன்றையும் வாசித்தார்: ஆனால் கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவர் மறுத்து விட்டார். 14 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் போருக்கு முடிவு கட்டுவதோடு கட்சிகளுக்கு இடையே ஒரு பொது அணுகுமுறையை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் அமைதி திரும்புவது முக்கியமானது என அவர் கூறினார்.

### பிரிட்டன் முயற்சி

பிரிட்ட னின் வெளியுறவு அமைச்சர், மாக்கன் புட்சின் அவர்களிடமும் அவரின் சிற்றமைச்சர் டாக்டர். லியன் பொக்ஸ் அவர்களிடமும் இது குறித்து பல கலந்துரையாடல்கள் நடந்து, வட அயர்லாந்தில் பிரிட்டன் சந்திக்கும் பிரச்சினைகளைப் பற்றி அங்குள்ள இரு முக்கிய கட்சிகள் எடுக்கும் அணுகுமுறைகளின் அனுபவங்கள் பற்றி ஆலோசனைகளும் எடுக்கப்பட்டன. டாக்டர் பொக்ஸ் அவர்கள் கடந்த 8 மாதங்களில் மூன்று தடவை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார் இந்த விஜயத்தின்போது இவர் அரசுடனும். எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

கடைசிப் பேச்சுவார்த்தையில் அரசுக்கும் புலிப்படையினருக்கும் இடையே எதிர்காலத்தில். நடக்கும் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் முனைந்து இருக்கலாம் என்ற யூகங்களை எழுப்பின. அப்படிப் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் இல்லை என்றால் கூட இரு அரசியல் கட்சிகள் நெருங்கி வரச்செய்வதில் பிரிட்டன் அலுவலர்களின் ஒரு முக்கிய பங்கு வகித்து இருப்பது போல் தெரிகிறது. இது சமாதான முயற்சியில் நிரந்தர விளைவுகளை ஏற்படுத்தலாம். அரசு சிறுபான்மை தமிழர்களுக்கு ஓரளவு தன்னாட்சி வழங்கும் நோக்குடன் அரசியல் சாசனத்தில் தீவிர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியில் ஆதரவைப் பெற விரும்புகிறது.

### சிங்களக் கட்சிகள்

அரசுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஏற்பட்டுள்ள இணக்கம் பற்றி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் ஆன ஜோசப் பரராஜசிங்கம் அவர்களிடம் கேட்டோம்.

இப்படியான இணக்கம் ஒன்று ஏற்பட்டு இருப்பதாக இன்று நடைபெற்ற கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாட்டிலே இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் தெரிவித்ததாக நான் அறிகின்றேன். உண்மையில் இலங்கையுடைய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்றால் இலங்கையை மாறி, மாறி ஆண்டு வந்துள்ள இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளும் ஒருமித்து, ஒரு தேசியப் பிரச்சினையாக அவர்கள் இருவரும் ஒத்துப் போகும் பட்சத்தில்தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியும். எனவே அவர்கள் இருசாராரும் இனப்பிரச்சினையில் ஒன்றுபட்டுச் செயல்பட மேற்கொண்டிருக்கிற தீர்மானம் வரவேற்கத்தக்கது. அதில் முக்கியம் என்னவென்றால் பேசும்பொழுது எல்.ரி.ரி.ஈ-யுடன் பேசுவது ஆனாலும் இரு சாராரும் அதற்கு ஒப்புதல் தெரிவித்து இருக்கின்றார்கள்.

கே: அரசும் புலிப்படையினரும் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் அதாவது எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் என ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார். எனவே எல்ரிரிஈ-க்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் ஏதுநிலை இருக்கின்றதா?

ப: கண்டிப்பாக இருப்பதாக அறிகின்றேன். இது சம்பந்தமாக ஒரு வாரத்துக்கு முன்பு கழுவாஞ்சிக்குடியிலே ஒரு திறப்பு விழாவில், நான் பேசும்பொழுது சூசகமாகத் தெரிவித்து இருந்தேன். அது வரவேற்கத் தக்கதொன்றாகும் என்றும கூறியிருந்தேன்.

### நல்ல முடிவு

கே: இன்னும் சற்றுவிபரமாகக் கூற முடியுமா?

ப: எனது பாராளுமன்ற வாழ்க்கையில் கடந்த ஏழு ஆண்டு காலத்திலும், பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உலக அரங்கிலே பங்கு பற்றிய மகாநாடுகளிலும் சரி, இனப்பிரச்சினை, தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால், புலிகளோடு பேசித்தான் தீர்க்க வேண்டும் என்கின்ற அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளேன். இதிலே எவ்விதமான மாற்றமும் இல்லை. அதுதான் எதார்த்த நிலை. இன்று வடகிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாகாணத்தின் மொத்த விஸ்தீரணத்தில் 70 வீதமானது புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. புலிகள் சக்தி வாய்ந்தவர்களாக உள்ளார்கள். எனவே அவர்களுடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். எனவே அரசு எடுத்து இருக்கின்ற முடிவு நல்ல முடிவு என்று தான் நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

கே: பிரிட்டன் இந்த விசயத்தில் அதாவது இரு தரப்பினருக்கும் இடையே புலிப்படையினருக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும் போது மத்தியஸ்தம் வகிக்க முன் வந்திருப்பதாக வதந்திகள் அடிபடுகின்றன. இந்த வதந்திகளில் எவ்வளவு உண்மை இருக்கின்றது.

ப: இது சம்பந்தமாக நான் கேள்விப்பட்டதற்கு அமைய பிரிட்டிஷ் நாட்டின் வெளிவிவகார உதவி அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்பே இங்கு வந்து எங்களுடைய வெளிநாட்டு அமைச்சருடன் பேசியதாகவும் அதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவரையும் ஜனாதிபதி அவர்களையும் சந்தித்து விட்டு, விமானம் மூலம் திரும்பியுள்ளதாகவும் ஒரு செய்தி தெரிகின்றது. அதில் உண்மை இருக்கலாம்.

எனவே அவர்களுடைய தலையீடு இதில் இருப்பதாகத் தெரிகிறது. காரணம் என்னவென்றால் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சென்ற மாதம் இங்கு விஜயம் செய்த போது அவரை நான் சந்திக்க இருக்கிறேன். சக பாராளுமன்ற உறுப்பினர் திரு. நீலன் திருச்செல்வத்தோடு சந்தித்துப் பேசியபோது இதுசம்பந்தமாக அவர்க்கு நான் எடுத்துக் கூறினேன். எல்ரிரிஈ-யுடன் கண்டிப்பாகப் பேசவேண்டும். அந்தந்த பிராந்தியத்தில் அதாவது வட கிழக்கில் இருக்கின்ற நிலை இப்படி இருக்கின்றது என்று அவருடன் நான் தெரிவித்து இருக்கின்றேன்.

### எதிர்கால நம்பிக்கை

அவர் இன்று காலை எனக்கும், டாக்டர் நீலனுக்கும் ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். அதிலே நாங்கள் கூறிய விசயத்தைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறி இருக்கின்றார்.

கே: அரசுக்கும் புலிப்படையினர்க்கும் இடையே எதிர் காலத்தில் பேச்சுவார்த்தை நடக்கும் பட்சத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)



கழக நிர்வாகிகள் புடைசூழ தமிழக சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு சற்குண பாண்டியன் வீற்றிருக்க கழக இசைக்குழுவினர் உணர்ச்சிப் பாடல்கள் பாடுகின்றனர்.

## செய்திச் சரம்

### 21-4-97

இந்திய-இலங்கை உறவு சீர்கெட்டுக் கிடந்த நேரத்தில் இருதரப்பு உறவைப் பலப்படுத்த உதவி புரிந்தவர் குஜ்ரால் என இலங்கை அதிபர் புதிதாக பதவியேற்றிருக்கும் இந்திய பிரதமர் ஐ.கே. குஜ்ராலுக்கு பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

(தினகரன்)

### 22-4-1997

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை என்ற இடத்தில் புலிகள் ரோந்து வந்த இராணுவத்தினர்மீதுதிடீர்த்தாக்குதல் நடத்தியதில், 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(தினமணி, தினகரன், கதிரவன், இந்து)

### 23-4-1997

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீன்பிடி விசைப்படகு மீது இலங்கை கடற்படையினர் சுட்டதில் மூன்று மீனவர்கள் காயமடைந்தனர்.

(தினமணி, தினமலர், கதிரவன், இந்து)

இலங்கையின் ஒரு தமிழர் தலைவர்டக்ளஸ்தேவானந்தா எம்.பி பிரதமர் குஜ்ராலுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், இலங்கையில் தமிழீழத்தை தாயகமாகக் கொண்ட தமிழர்கள் 20 ஆண்டுகளாக வேதனையால் துடிக்கிறார்கள். அவர்கள் துயரத்திற்கு முடிவு ஏற்பட உதவுங்கள் எனக் கூறியுள்ளார்.

(தினகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புலிகளின் முகாம் மீது, இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதில் 15 புலிகள் கொல்லப்பட்டனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

(தினமலர்)

### 24-4-1997

இலங்கை அரசுடன் பேச புலிகள் முன்வர வேண்டும் என இலங்கை அமைச்சர் தொண்டமான் நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நிருபர்களுக்கு பேட்டியளித்துக்கூறியுள்ளார்.

(கதிரவன்)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென இந்தியாவின் புதிய பிரதமர் குஜ்ராலுக்கு, லண்டனில் இருந்து புலிகள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

(தினமணி, தினகரன், கதிரவன்)

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## பெண்ணே கொஞ்சம் நில்!

-ஜெயசக்தி-

நல்லெண்ணம்
கொண்டவர்களே
வணக்கம்
நான் ஒரு பெண்
பெயர் கூட
அழகாய் இருக்கும்
வயது மெனக்கு
இருபது அல்லது
முப்பதுக்குள்ளிருக்கும்

என்னுணர்வையடக்கி
பள்ளிக்கனுப்பத்
தெரியாத அப்பா
தவறுகளை காண்கையில்
"அம்மா வளர்த்த
வளர்ப்பு" என்பார்

எங்கோயிருந்த
இரண்டு கால்கள்
இரண்டு கைகள் என்னைப்
போலவே,
ஆனால் ஆண்பிள்ளை!
மூளை முழுவதும்
முதலாளித்துவம்
என்னையும் அது
விட்டு வைக்க வில்லை.

திருமணம் முடிந்தது
பிறந்த குழந்தையும்
பால்குடி மறந்தது
வறுமைச் சூழலில்
சிக்கிய குடும்பமாய்
வட்டிக்கு வட்டியும்
கந்து வட்டிக் கொள்ளையும்
வீட்டை விட்டு
மறைந்திருக்கச் சொன்னது
கொலை செய்ய நினைத்தது

என்னைப் போலங்கே
ஏராளம் பெண்கள்
எங்கோ போகின்றனர்
நானும் போனேன்
அரபிய நாட்டில்
எங்கோ ஓர் மூலையில்
நானும் என்
தனிமையும் மிச்சமாய்

தனிமையைப் பயன்படுத்திய
கனதனவான்களும்
பணமள்ளிக் கொடுத்தென்
உழைப்புகளை உறிஞ்சினர்
உறவுகளைப் பிரிந்து நிதம்
பணமாக அனுப்பினேன்

உறவை விசாரிக்கும்
நேற்றுக்கிடைத்த கடிதத்தில்
கடனெல்லாம்
அடைத்து விட்டேன்
மகளும் இப்போது
வேலைக்குப் போறாளாம்
எனக்குள் பயம்
தூக்கியடித்தது
நாளையவளும்
என்னைப் போல்
அனுப்பப் படலாம்
அவஸ்தைப் படலாம்

அன்றெம்மை
பக்கத்து வீட்டு
குகனோடு பேசவும்
பக்கத்துத் தெருவுக்கு
தனியாகச் செல்லவும்
மறுத்த சமூகமடி
இன்றெம்மை
எங்கோ அனுப்பிவைத்து
எம்முழைப்பு பணமாவதை
ருசித்தேப்பம் விடுகிறதே!

என்னைத்தான்
தொலைத்தேன்
என்மகள்களேனும்
ஏற்புடைய சமூகமதை
இணைந்துருவாக்கி
அதில் வாழ வேண்டுமே!

## இலட்சியம்

நாட்டு நலம் பேணக்
கூட்டுறவைக் கூட்டுவேன்-தமிழ்
ஏட்டு நலம் பேணப்-புதுப்
பாட்டுப் பல இயற்றுவேன்
பூட்டில்லாப் பொய் வாயரின்-வார்த்தை
வேட்டுதனை அழிப்பேன் !
மாட்டுக்கிணையாக உழைக்கும் மாந்தர்க்கும்
நம்பிக்கை யொளியூட்டுவேன்!
காக்கைபோலே ஒற்றுமையைக் காப்பேன்-பிறர்
வாழ்க்கையிலே நன்மைதனைக் கோர்ப்பேன்-நல்லோர்
சேர்க்கையிலே நல்ல பாதை அமைப்பேன்
என்கையின் உழைப்பை மதிப்பேன்-தமிழ்
அன்னையின் இதயத்தை துதிப்பேன்-இந்த
இலட்சியம் என் வாழ்வின் கோயில்
உள்ளத்தின் சத்தியமே அதன் வாயில்

"கவிசுரபி"
சுப. சந்திரசேகரன்

## மலரும் மங்கையும்

மலரே நீ மலர்ந்து விட்டாய்
நானோ கூம்பி நிற்கின்றேன்
மலரே நீ கதிரவன் ஒளியில்
அழகாய்த் திகழ்கின்றாய்
நானோ கட்டிய கணவனின்
கட்டிலறையில் கசங்குகின்றேன்
மலரே மாலையாகத் தொடுக்கப்பட்டு
இறைவனை அலங்கரிக்கின்றாய்
நானோ தீயிலே குளிப்பாட்டப்பட்டு
சாம்பலாய்ப் போகின்றேன்

ஏ. கலைச்செல்வி
தென்பள்ளிப்பட்டு

## இனியாவது...

பிறக்கட்டும் பிறக்கட்டும் இனியாவது
பிரச்சினையற்ற ஈழமொன்று புதிதாய் !
இறக்கட்டும் இறக்கட்டும் இனியாவது
இனவாத இழிசெயல்கள் எல்லாமே !
திறக்கட்டும் திறக்கட்டும் தமிழனுக்கினியாவது
திசைகளெல்லாம் வெற்றியினது வாசல் !
மறக்கட்டும் மறக்கட்டும் ஈழத்தார் இனியாவது
மரணத்தின் ஓலங்கள் ஒவ்வொன்றினையும்!

தீரட்டும் தீரட்டும் எம்மக்களுக்கு இனியாவது
தீயாய்த் தீண்டிடும் கொடுமைகள் யாவுமே!
நேரட்டும் நேரட்டும் தமிழர்க்கு இனியாவது
நேர்மையானதொரு நிகழ்காலம் உலகினில் !
ஆறட்டும் ஆறட்டும் உயிரில் இனியாவது
அடிபட்ட காயங்கள் அனைத்துமே!
ஏறட்டும் ஏறட்டும் இனியாவது வீழ்ந்துபோன
மகுடமது மறத்தமிழனின் தலைதனிலே!

-சோகவி. செல்வநாதன்
130, தோப்புக்கொல்லை, புதுக்கோட்டை-622303.

## ஓ மேகமே வா

தென்றல் மோதி உலாவும் மேகமே
நீ வானில் ஓர் இடத்தில்
நிற்க முடியாதது யார் போட்ட சாபம் ?
வானில் பல்லாயிரம் நட்சத்திரங்கள்
அதனையும் வென்று விடும்
உனது வர்ண ஜாலங்கள்
மாரியில் நீ தொடங்குவாய் தொடர் யாத்திரை
காலை யாம் கண் விழித்தாலும்
முடிவதில்லை உன் தொடர் கதை
தாவரங்களுக்கு நீ பெரும் மாத்திரை
உன் தரிசனம் கிடைக்காவிட்டால்
அவை தவறவிடும் ஜீவ யாத்திரை!
நீ கோபத்தில் ஆழ்ந்திருந்தால்
உன் கொடைகளை நிறுத்தி விட்டால்
நடக்கின்றது பூமியில் வறுமை
ஓ மேகமே
வெள்ளை உள்ளம் கொண்டவனாய் வா
வறண்ட பூமியில் பசுமை செழிக்க
பாரிபோல மழையை பாரில் அள்ளித்தரவா!

P. S. அன்ரனி
கீழ்ப்புதுப்பட்டு

## பறந்த பிள்ளை

பாரதனில் போரதுவோ
புதுமை யடைந்தது-என்
பெத்த பிள்ளை போரதற்குப்
பறந்து போனது
புதுமை பல புரிவானென
மனமும் நினைத்தது-பின்
போன பிள்ளை பாதியிலே
திரும்பி வந்தது-அதுவும்
பாடையிலே வந்ததுதான்
பதைக்க வைத்தது !-அவனைப்
பார்த்தவர்கள் புகழ்ந்து பகர
மனமும் அழுதது
பெத்த பிள்ளை பிரிவுத்துயர்
தினமும் வாட்டுது-பல
பிள்ளைகள் தினம் மடிவதெண்ணி
மனமும் மறுகுது
பாரிதனை மீட்டிடப் பலர்
புறப்பட வேண்டும்-அதைப்
பார்த்து மகிழ்ந்து மடியும் காலம்
கிட்டிட வேண்டும்

எஸ்பீ. எஸ். ரமணீ
வத்தலக்குண்டு

# மன்னார் பெருநிலப்பரப்பில் பாரிய உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம்

மன்னார் பெருநிலப்பரப்பு பகுதிக்கு வாகனங்கள் மூலம் உணவுப் பொருள் அனுப்புவதை நிறுத்தி விடுமாறு பாதுகாப்புத்துறை உயர்பீடம் உத்தரவிட்டுள்ளதை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாரியதொரு உணவு நெருக்கடியை எதிர்நோக்கும் அச்சம் தலைதூக்கியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பெரு நிலப்பரப்பிற்கு வாகனங்களில் உணவுப் பொருள்கள் அனுப்பும் நடைமுறை நிறுத்தப்படுமென பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இடம்பெயர்ந்த மக்களின் இடர்

யாழ். குடா நாட்டிலும் கிளிநொச்சியிலும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் மன்னார் பெருநிலப் பகுதியிலும் உள்ளனர். அவர்களுடன் அப்பகுதியை வதிவிடமாகக் கொண்ட மக்களுடன் சேர்த்து சுமார் 50 ஆயிரம் பேர் உணவு விநியோகத்தில் எடுக்கப்பட்ட இந்தத் திடீர் முடிவால் பாதிப்படையும் நிலைமை தோன்றியுள்ளது.

இதே வேளை இதற்கு மாற்று நடவடிக்கையாக மன்னார் வீதியில் மடு வீதி சந்தியில் உணவு விநியோக நிலையம் ஒன்றை அமைத்து உணவுப் பொருள்களை வழங்குமாறு படை அதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டுள்ளதாக அறியவருகிறது. ஆனால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அதிக தூரம் வந்தே இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ் எம்.குருஸ் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நிலை கொண்டுள்ள தமிழ்கட்சிகளின் நிலைப்பாடு என்ன ? முக்கியமாக உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

ப : எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் நாங்கள் இதை வரவேற்கின்றோம். ஏனெனில் எதார்த்தமான நிலை புலிகளுடன் பேசத்தான் வேண்டும். இதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. பிரச்சினையை, பிரச்சினைகளில் ஈடுபட்டு இருப்பவர்களுடன் தான் பேச வேண்டும். அதேவேளைஎங்களுடையகட்சியின் நிலைப்பாடு என்னவென்று தெரியாது. ஆனால் எதார்த்தமாகப் பார்க்கும் போது, யாருடன் பேச வேண்டுமோ, அவர்களுடன் தான் பேச வேண்டுமே ஒழிய மற்றவர்களுடனே பேசி இதில் பிரயோசனம் இல்லை என்பது தான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்-உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் தொடர்பான அறிவித்தல்

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதி மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் கீழே காணப்படுகின்றன.

இலங்கை அகதி மாணவர்கள் பல துறைகளில் உயர் கல்வி மற்றும் முறை சார்ந்த தொழில் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

### (அ) பத்தாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான வாய்ப்புகள்

பத்தாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் மறுபடியும் பள்ளியில் சேர்ந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை படிப்பதே நல்லது. இல்லாத பட்சத்தில் அவர்கள் பாலிடெக்னிக்கிலும், அரசு தொழிற் பயிற்சி கூடங்களிலும் (ஐ.டி.ஐ) படிக்க வாய்ப்பு உண்டு. இந்நிறுவனங்களில் இடம் கிடைப்பது நிச்சயமில்லாத காரணத்தைக் கொண்டு பதினோராம் வகுப்பில் படிப்பதற்கு பள்ளியில் சேர்ந்து இந்நிறுவனங்களில் படிக்க விண்ணப்பிப்பது பாதுகாப்பானது. அனுமதி பெற்றால் பள்ளியில் (ரி சி) பள்ளி மாற்றுச் சான்றிதழ் பெற்று இந்நிறுவனங்களில் சேரலாம்.

### 1. பாலிடெக்னிக்

பாலிடெக்னிக்கில் படிக்க இலங்கை அகதி மாணவர்களுக்கு (20) இடங்களை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிக்க விரும்புவோர் பத்தாம் வகுப்புத் தேர்வில் அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது 35 சதவிகித மதிப்பெண்களும் இவ்விரண்டின் தொகுப்பில் 45 சதவிகித மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். அத்தகுதியைப் பெற்றோர் தொழில் கல்வி இயக்கத்திலிருந்து வெளிவரும் பொது அறிவித்தலில் கொடுக்கப்படும் விதிமுறைக்கமைய தொழிற்கல்வி இயக்கத்தில் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்தபின் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2. தொழிற் பயிற்சிக் கூடங்கள் (ஐ டி ஐ)

ஐ.டி. ஐகளில் சேர்ந்து படிக்க விரும்புவோர் அருகிலுள்ள இக்கூடங்களை அணுகி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்தபின் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு -: ஐ.டி.ஐ. என்ற பெயரில் இரண்டு விதமான பயிற்சி நிலையங்கள் உள்ளன.

முதலாவது - அரச தொழில் பயிற்சிக்கூடங்கள். இவை அரசினால் நடத்தப்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் இந்நிறுவனத்தில் சேர்ந்து படிப்போர் பத்தாம் வகுப்புச் சித்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

சான்றிதழ் - தொழிற் சான்றிதழ்

படிப்புக் காலம் - 1. பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மூன்றாண்டு காலம்.
2. பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம்.

ஒவ்வொரு அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் சில இடங்கள் இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இந்திய தொழில் நுட்பக் கல்வி நிலையம்

இந்நிலையங்கள் தனியாரால் நடத்தப்படும் முறையான அங்கீகாரம் பெறாதவை. அவற்றில் படிக்க கல்வித் தகமை இல்லை. இவற்றில் இட ஒதுக்கீடு இல்லை. இலங்கையில் இச்சான்றிதழுக்கு மதிப்புக் குறைவு.

### 3. தாதியர் பட்டயப் படிப்பு

பத்தாம் வகுப்புத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படும் தாதியர் பட்டப் படிப்பு படிக்கலாம். ஆனால் இந்நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றவை என்பதை உறுதி செய்த பின் சேரவும்.

### ஆ) பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்றோருக்கான வாய்ப்புகள்

பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல வாய்ப்புகள் உள்ளன. அவையாவன :- 1. மருத்துவப் பட்டப் படிப் | 2. பொறியியல் பட்டப்படிப்பு 3. வேளாண்மை பட்டப் படிப்பு 4. கலை அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை, இளம் அறிவியல், இளம் வணிகவியல் பட்டப் படிப்பு 5. சட்டப் பட்டப் படிப்பு 6 தாதியர் பட்டப் புடிப்பு 7. அஞ்சல் வழிக்கல்வி மூலம் பட்டப் படிப்பு

இவ்வாய்ப்புகள் இருக்கும் போதிலும் மருத்துவம் பொறியியல் போன்ற தொழிற் சார்ந்த கல்வி கற்பதற்கு போட்டி அதிகமாக இருப்பதால் முதலில் கலை, அறிவியல் கல்லூரியொன்றில் சேர்ந்து பின் முயற்சிகள் செய்வது பாதுகாப்பாக இருக்கும்.

### 1. மருத்துவம்

மருத்துவக் கல்லூரிகளில் சேர ஆர்வமிருப்போர். இயற்பியல். வேதியல் மற்றும் உயிரியல் அல்லது (விலங்கியல், தாவரவியல்) ஆகிய பாடங்களை பன்னிரண்டாம் வகுப்பில் படித்து, குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55 சதவிகித மதிப்பெண்களைப் பெறுவதுடன் மொத்தமாக 60 சதவிகித மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும் இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் பத்திரிகைகளில் வெளியாகும் பொது அறிவிப்புக்கமைய மருத்துவ இயக்குநரகத்தில் விண்ணப்பம் பெற்று அதிற்குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைக்கேற்ப விண்ணப்பம் செய்யலாம்.

### 2. பொறியியல்

பொறியியல் கல்லூரிகளில் சேர ஆர்வம் கொண்டவர்கள் இயற்பியல், வேதியல், கணிதம் ஆகிய பாடங்களைப் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த குறைந்தது ஒவ்வொரு பாடத்திலும் 55 சதவிகித மதிப்பெண்களைப் பெற்று மொத்தமாக 60 சதவிகித மதிப்பெண்களை மேற்குறிப்பிட்ட பாடங்களிற்கான மதிப்பீட்டின் தொகுப்பில் பெற்றிருக்க வேண்டும் இத்தகுதிகளைப் பெற்றிருப்போர் தொழிற் கல்வி இயக்ககத்தினால் செய்தித்தாள் மூலம் வெளியிடப்படும் விளம்பரத்தை கவனித்து அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்படும் முறையில் தொழிற் கல்வி இயக்குநரகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 3. வேளாண்மை

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பில் சேர்ந்து படிக்க விரும்புவோர் பன்னிரண்டாம் வகுப்பில் இயற்பியல், வேதியில், உயிரியல் அல்லது (விலங்கியல், தாவரவியல்) ஆகிய பாடங்கள் கற்று ஒவ்வொன்றிலும் குறைந்த 55 சதவிகித மதிப்பெண்களையும் இப்பாடங்களின் மதிப்பெண்களின் தொகுப்பில் 60 சதவிகித மதிப்பெண்களையும் பெற்றிருக்க வேண்டும். இத்துறையில் படிக்க விரும்புவோர் வேளாண்மைத் துறையினால் செய்தித்தாள்களின் ஊடாக வெளியிடப்படும் விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4. கலை அறிவியற் கல்லூரிகள்

கலை அறிவியல் கல்லூரிகளில் பி ஏ. பி எஸ்.சி. பி.காம் பி.பி.ஏ. ஆகிய பட்டப்படிப்புகளையும் பட்ட மேற் படிப்புகளையும், படிக்க ஆர்வமுள்ளவர்கள் அருகிலுள்ள கல்லூரிகளில் அனுமதி பெற மனுச் செய்யவேண்டும். இலங்கை அகதி மாணவர்களை சேர்ப்பது இந்திய மாணவர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத முறையில் ஒவ்வொரு துறையிலும் மேலதிக ஒதுக்கீடுகளைச் செய்யும்படி கல்விச் செயலர் ஆணை பிறப்பித்துள்ளார்.

### 5. சட்டப் படிப்பு

பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் ஐந்தாண்டு சட்டப்படிப்பிற்கு சட்டக் கல்வி இயக்ககத்திற்கு விண்ணப்பிக்கலாம். தமிழ் நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி சட்ட கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம். மேலும் பட்டப் படிப்பினை நிறைவு செய்த மாணவர்கள் மூன்றாண்டு பட்டப்படிப்பிலும் சேர வாய்ப்பு உண்டு.

### 6. தாதியர் பட்டப்படிப்பு -

பன்னிரண்டாம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் நான்காண்டு தாதியர் பட்டப்படிப்பு கற்க வாய்ப்பு உண்டு. அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகளில் விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

### 7. அஞ்சல்வழிக்கல்வி-

கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்புப் பெறாத மாணவர்கள் அஞ்சல் வழியில் பட்டப்படிப்பு, மேற்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு படிக்க வாய்ப்பு உண்டு. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை காமராஜர், சிதம்பரம் அண்ணாமலை, திருச்சி பாரதிதாசன், கோவை பாரதியார், பாண்டிச்சேரி ஆகிய பல்கலைக் கழகங்களின் தொலைக்கல்வி இயக்குனரகங்கள் மூலம் அஞ்சல்வழிக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றன. மேலும், புதுதில்லி இந்திரா காந்தி பல்கலைக் கழகமும் இவ்விதக் கல்வித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

1. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் சித்திபெற்ற மாணவர்கள் பட்டப்படிப்பினை நேரடியாக மேற் கொள்ள வாய்ப்பு உண்டு.

(8-ம் பக்கம் பார்க்க)




## சிங்களப் பெயரிடச் செலவிடும் ஆமி!

ஸ்... அப்பாடா... என்னவெய்யில் என்ன புழுக்கம் றோட்டில நடக்கவே முடியல்ல...

அ.. வாங்கோ சுப்பையாண்ணை

சரியான வெய்யில் போல இருக்கு.

தம்பி நாங்களாவது வெய்யில்ல புழுங்கினாலும் ஒழுங்காக மூன்று நேரம் மூக்கு முட்டப் புடிக்கிறோம் இல்ல.

அங்கை வெய்யிலும் இல்லை மழையும் இல்லை எண்டாலும் ஒழுங்கா சாப்பிடுறதுக்கு சாப்பாடும் இல்லையாம்.

ஊரில நிலைமை சரியாய் இருக்கு என்று சந்திரிகா அம்மையாரும், கதிர் காமரும் உலகம் முழுவதும் புழுகித் திரியினம் கண்டியோ.

ஆனா மன்னார், வவுனியா கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் ஒழுங்காக உணவுகள் போய்ச் சேருகிறதில்லையாம். ஏன் மருந்துகள் கூட கிடைக்கிறதில்லையாம்.

ஏன் பாருங்கோ எங்கட கட்டுப்பாடு என்று கூறிக்கொண்டு பத்திரிகைகளுக்கு அடிக்கடி அறிக்கைகள் விடும் அரசாங்கம் இதையெல்லாம் காதில வாங்கிக் கொள்கிறதில்லையாம்.

எல்லாம் தமிழர்கள் தானே எண்ட எண்ணமாம். யாழில் வவுனியாவில் அழகுராணிப் போட்டி நடத்திறதில இராணுவப் படைகள் சரியான அக்கறை காட்டினவையாம். அதுமட்டுமே எப்படியாவது தமிழர் மனதில் இடம் பிடிக்கிறதோ இல்லையோ. தங்கட இதயத்தில யாராவது ஒரு தமிழிச்சியை தற்காலிகமாக இருத்திக் கொள்கிற முயற்சிகளும் நடைபெற்றதாம்.

சொல்லி அழ முடியாத நிலையில் எங்களையாட்களும் இருக்கினமாம்.

உது தேவையோ மோனை.

வவுனியாப் பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்கிறதற்காக ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வன்னிப் பகுதிக்கு சென்று விட்டதையடுத்து வீதியோரங்களில் உள்ள பல காவலரண்களில் ஒரு இராணுவத்தினருக்கு ஐந்து தமிழர் காவல் என்ற அடிப்படையில் வைச்சிருக்கினமாம்.

இதனால காவலரண்கள் உள்ள பகுதியால் மக்கள் போறதை தவிர்க்கிறதோட மட்டுமல்லாமல் அனேகமாக வீட்டை விட்டு வெளியில வாறதும் இல்லையாம். எவ்வளவு காலத்துக்குத்தான் இப்பிடியே இருக்கிறதோ பெண்களுக்கு அழகு ராணிப் போட்டி என்று மேலே சொன்னான் இதை மறந்து போட்டான்.

கேளும் சொல்லுறன்.

யாழ்ப்பாண மாணவர்களை அழைத்து தெற்கில் சுற்றுலா நடத்தியினமாம் அரச படையினர் சிங்களப்பெயரிடச் செலவு செய்யுறதோட பலத்த உபசரிப்பும். எல்லாம் வடக்கு, தெற்கு உறவை மேம்படுத்தத்தானாம்.

www.padippakam.com



# இந்திய அரசின் நடவடிக்கையே ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும்

**- கேயாரி -**

வவுனியாவில் இருந்து-வவுனியா-யாழ்ப்பாணம் தேசிய நெடுஞ்சாலையைத் திறக்கும் நோக்கம் என கூறிக்கொண்டு படையினர் தமது கண்மூடித்தனமான தாக்குதல்களுடன் படை நகர்வைத் தொடங்கியுள்ளனர். படையினரின் இந்த நகர்வையடுத்து ஓமந்தை, நெடுங்கேணி போன்ற பிரதேசங்கள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு கூறிக் கொள்கிறது.

இதே நேரம் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இராணுவம் எத்தகையதோர் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டதோ, இலட்சக் கணக்கான மக்களையும் அனுதைகளாக இடம் பெயரச் செய்தது மட்டுமல்லாமல் இருப்பிடங்களையும் அழித்தொழித்து விட்டதோ அத்தகையதோர் தாக்குதல்களைத்தான் தற்போது இராணுவம் வன்னிப் பகுதியிலும் மன்னார்ப் பகுதியிலும் ஆரம்பித்துள்ளது.

வீதியின் இருமருங்கிலும் விமானங்கள் தாக்குதல் தொடுக்க படையினர் முன்னேறி வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்துவது போல் அரச படைகள் தாம் கைப்பற்றி வரும் பிரதேசங்களின் தமிழ்ப் பெயர்களைக் கூட சிங்களப் பெயர்களாக மாற்றிச் சொல்லுகிறார்களாம். இக்கட்டுரை எழுதப்படும் வரை ஏறத்தாழ அனைத்துப் பகுதியிலும் 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. சரியான உண்மை நிலை இதுவரை தெரியவரவில்லை

இது ஒரு புறம் இருக்க இராணுவக் கட்டுப்பாடு இல்லாத மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள். இவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரண உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் பங்கீட்டுப் பொருட்களையும் தற்போது இராணுவம் நிறுத்தவும் உள்ளது.

பொருட்களின் விலைகளும் யானை விலை குதிரை விலை என்ற அடிப்படையில் உயர்ந்துள்ளது. இதே வேளை வைத்திய மருந்துப் பொருட்களுக்கும் அங்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் டாக்டர்களும் போதியளவு இல்லாதிருப்பதாக அறிய வந்துள்ளது.

பேச்சுவார்த்தை விடயத்தில் இலங்கை அரசு மீண்டும் இழுபறி விளையாட்டுக் காட்டத் தொடங்கியுள்ளதும் பிரச்சனை தீர்வுக்கான வழிமுறைகளைக் கொண்டு வருவதாகத் தெரியவில்லை.

புலிகள் இயக்கத்துடன் அரசு பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள வேண்டும். மூன்றாவது தரப்பு ஒன்று தலையிட வேண்டும் என்றெல்லாம் அண்மையில் கோரிக்கைகள் பல்வேறு மட்டங்களிலும் முடுக்கி விடப்பட்டன. இவை பரபரப்பான செய்திகளாகவும் மக்கள் தொடர்பு சாதனங்களால் வெளியிடப்பட்டன.

இதுபோக ஜனாதிபதி ஒரு புறம் பேச்சுவார்த்தை இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு என்று முழக்கமிட, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த ''பறையனாங்குளம்'' ''முருங்கன்'' என்றெல்லாம் அவசர அவசரமாக புறப்பட்டுச் சென்று சிங்கள மொழிகளில் பெயர்களைப் பதிப்பதும் சிங்கள பொலீஸ் நிலையங்களைத் திறந்து வைப்பதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

படையினர் சோர்ந்து விடாமல் இருப்பதற்காக அவர்களை நம்பிக்கையூட்டி தயார் நிலையிலும் வைத்திருக்கும் அவர் போர் மீதே நம்பிக்கை வைத்திருக்கிறார் என்றும் இராணுவத் தீர்வின்மூலமேபிரச்சினையைத் தீர்க்கலாம் என நம்பிக்கை வைத்துள்ளதாகவும் கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனாலும் அண்மையில் பிலிப்பைன்சில் நடைபெற்ற ''இண்டர் நேஷனல் அலெட்'' மாநாட்டில் கலந்து கொண்ட 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு பேச்சு டெத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இனப்பிரச்சனைத் தீர்க்க இலங்கை அரசு துரிதமாக முன்வர வேண்டும் என்பதில் வெளி நாட்டுச் சக்திகள் முனைப்பாக இருக்கும் இச்சூழலில் இந்தியா மௌனமாக இருப்பது உலக நாடுகளுக்கு புதிராகவே இருக்கும்.

ஆட்சிக்காகவும், அரசியலுக்காகவும் நடந்து முடிந்த பாதகமான சூழ்நிலையாலும் ஈழத்துத் தமிழ்மக்களை ஒரேயடியாக ஓரம் கட்டி வைப்பது எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த சுவடே தெரியாமல் செய்து விடும் என்பதை மறந்து விடக் கூடாது.

''ஈழத்தமிழர்கள் அநாதைகள் அல்லர்'' என்பதை மேடைப் பேச்சில் பேசுவதை விடுத்து செயலில் காட்ட வேண்டும். அப்போதுதான் இலங்கை அரசுக்கும் சற்றுப் பயம் ஏற்படும்! கவனிப்பார்களா?

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

2. பட்டம் பெற்ற மாணவர்கள் பட்ட மேற்பட்டப் படிப்பு மற்றும், பட்ட மேற்பட்டயைப் படிப்பு பாடங்களில் சேர்ந்து படிக்க வாய்ப்பு உண்டு.

### *முறைசாராக் கல்வி - திறந்த வெளிப் பல்கலைக் கழகத் திட்டம்-*

சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜர், இந்திராகாந்தி ஆகிய பல்கலைக் கழகங்கள் திறந்த வெளிப் பல்கலைக் கழக திட்டங்களையும் அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றன. அடிப்படைக் கல்வித் தகுதி இல்லாத மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பினையும், பட்டமேற்படிப்பையும் படிக்கவாய்ப்பு உண்டு. பட்ட படிப்பினை மேற்கொள்ள (18) வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கு (25) வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். மேலும், இந்திராகாந்தி பய்கலைக்கழகம் பல சான்றிதழ் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது. இதற்குத் தேவையான சான்றிதழ் பிறப்புத் திகதி அத்தாட்சி.

ஈழ அகதி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி கற்க இவ்வரிய வாய்ப்புகளை பயன்படுத்தலாம்.

### *கழகத்தில் பெயர் பதிவு செய்தல்-*

உயர் கல்வி கற்க விரும்பும் ஈழ அகதி மாணவர் உயர் கல்வி அனுமதி விபரப்படிவத்தினை பூர்த்தி செய்து கழகத்தில் தம் பெயரை பதிவு செய்தால், உயர் கல்வி நிறுவனங்களில் கற்பது தொடர்பான விபரங்கள் அவர்களுக்கு தெரியப்படுத்தப்படும். இப்படிவம் கழக பாவனைக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது. தம் விபரங்களை எமக்கு அறியத் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு 1-*

ஈழ அகதி மக்களுக்காக வழங்கப்படும் இட ஒதுக்கீடு தமிழ்நாடு அரசினால் வழங்கப்படுகின்றது. இவ்வொதுக்கீட்டில் தனிநபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ எந்த சம்பந்தமும் இல்லை.

*குறிப்பு 2-*

கழகத்தில் பெயர் பதிவு செய்வதால் கல்லூரிகளில் அனுமதி கிடைக்கும் என்பது உறுதியல்ல.

---

## திருகோணமலையில் தமிழ் மக்களின் காணிகள் சிங்களர்க்கு பகிர்ந்தளிப்பு

திருகோணமலை இந்து மத 'ட்ரஸ்ட்'டுக்கு சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சிங்கள மக்களின் எண்ணிக்கையை அப்பகுதிகளில் அதிகரிக்கும் நோக்கத்துடனேயே இது செயற்படுத்தப்படுகிறது. இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சி எம்.பி எஸ். சிவதாசன் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

கடற்றொழில், நீர்வள அமைச்சின் கட்டளைகள் மீதான உரையில் இதனைத் தெரிவித்த அவர், இன சௌஜன்யத்தை வலியுறுத்தி குரல் கொடுக்கும் அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது.

தொடரும் யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கில் வாழும் ஏராளமான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளுல் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.

அதனால் மீனவர்களுக்கென நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

---

## செய்திச்சரம்

**26-4-1997**

இந்தியபிரதமர்ஐ.கே.குஜ்ராலை இலங்கைவெளியுறவுத்துறை அமைச்சர் லட்சுமண் கதிர்காமர் நேற்று டில்லியில் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

(தினமணி, தினகரன், கதிரவன், இந்து)

ஆப்கானிஸ்தானிலுள்ள இரண்டு புத்தர் சிலைகளை காப்பாற்ற வேண்டுமென இஸ்லாமிய நாடுகளை இலங்கை கேட்டுக் கொண்டுள்ளது.

(தினமலர்)

ஈழத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண, புலிகள் அமைப்புடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று இலங்கை சர்வகட்சி எம்.பி.க்கள் 22 பேர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(கதிரவன்)

**27-4-1997**

கடந்த 20 மாதங்களாக புலிகள் பிடியில் பணயக் கைதிகளாக இருந்த மூன்று கப்பல் சிப்பந்திகள், நேற்று வன்னியில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டனர்.

(தினகரன்)

புலிகள் வசமுள்ள யாழ்ப்பாணத்திற்கு செல்லும் முக்கிய சாலைகளை கைப்பற்ற பெரிய தாக்குதல் நடத்த இராணுவம் திட்டமிட்டு, மன்னார் மற்றும் வவுனியாவில் இராணுவம் குவிக்கப்பட்டு வருவதால் அப்பகுதியில் வாழும் தமிழர்கள் வெளியேறி இராணுவம் வசமுள்ள பகுதிகளுக்கு சென்ற வண்ணமுள்ளனர்.

(தினகரன்)

ஈழத்து காந்தி சா. ஜே. வே. செல்வநாயகம் நூற்றாண்டு விழா சென்னையில் இம்மாதம் 25, 2? ஆகிய இரு நாட்களில் நடைபெறுகிறது.

(தினமணி, இந்து)

**29-4-1997**

திருகோணமலையிலிருந்து 60 கி மீ. தொலைவிலுள்ள புல்மோட்டை என்ற இடத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்கியதில் 22 இராணுவத்தினர்கொல்லப் பட்டனர்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன் இந்து)

கடந்த வாரம் இலங்கையிலிருந்து தமிழகம் வந்த அகதிகளுடன் உதயகுமார் (24) மற்றும்கமலநாதன் (26)என்ற இரண்டு புலிகளும் வநததால் போலீசார் அவர்களை கைது செய்து செங்கல்பட்டு சிறையில் அடைந்தனர்.

(தினமலர், கதிரவன்)

படிப்பகம்

www.padippakam.com





முதல் நாள் விழாவில் உரையாற்ற வருகை புரிந்த முன்னாள் இந்திய அமைச்சரும், அகில இந்திய ஜனதா கட்சியின் தலைவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அவர்களை தந்தை செல்வாவின் மைந்தர் சந்திரகாசன் மாலையிட்டு வரவேற்கிறார்.

# திருக்கோவில் அகதி முகாம் மீது துப்பாக்கிச் சூடு; இளம் பெண் காயம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் அகதி முகாமில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது :-

திருக்கோவில் அகதி முகாதுல் இப் பெண் மடியில் குழந்தையை வைத்துக்கொண்டு உறவினர்களுடன் இரவு 9 மணிக்கு உணவருந்திக் கொண்டிருந்தார்.

### மருத்துவமனையில் அனுமதி

அப்போது முகாமுக்கு அருகில் உள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயப்பக்கமாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப் படும் சத்தம் கேட்டது.

உறவினர்கள் எழுந்து முகா 'ற்க்குள் ஓடினர். சாந்தி என்ற இந்தப் பெண்ணும் எழுந்து ஓடும் போது துப்பாக்கிச்சன்னம் முதுகைத் துளைத்துக் கொண்டு சென்றது.

அதிரடிப்படை முகாமுக்கு இச் சம்பவம் பற்றி அறிவித்ததும் அவர்கள் திருக்கோயில் வைத்தியசாலைக்கு இப்பெண்ணை கொண்டு சென்றனர்.

பின்னர் அங்கிருந்து அதிரடிப்படையினர் விசேட வாகனத்தில் மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அங்கு அனுமதித்துள்ளனர்.

இப்பெண் கஞ்சி குடிச்சாறு என்னும் இடத்தில் 1990ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்செயலில் இடம் பெயர்ந்து கடந்த 6 வருடங்களாக திருக்கோவில் அகதி முகாமில் வசித்தி வருகிறார்.

இதேவேளை ஒலுவில் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனதையடுத்து தமிழர்கள் வாழும் திராய்க்கேணி பகுதியிலும் முஸ்லிம்கள் வாழும் ஒலுவில் பகுதியிலும் நிலவிய பதற்றம் தணிந்துள்ளது.

அக்கரைப்பற்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் எம். ஜமால்டீன் இரு தரப்பினருடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்தே இப்பதற்றம் நீங்கியுள்ளது.

காணாமல் போன 5 முஸ்லிம் இளைஞர்களை மீட்டுத் தருமாறு இளைஞர்களின் பெற்றோர் அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்தில்முறைப் பாடு செய்கின்ளனர்.

# இலங்கைஅகதிகள்பிரச்னை தொண்டமானுடன் பேச்சு

## இந்திய ஐக்கிய முன்னணி அமைச்சரை சந்தித்தது

இலங்கையின் அகதிகள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பாக கிராமிய கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமானுடன் தாயகம் திரும்புவோருக்கான அகில இந்திய ஐக்கிய முன்னணி தூதுக்குழுவொன்று பேச்சுவார்த்தை நடத்தியது

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில் திருப்பத்தூர் அருகேயுள்ள புதூரில் தொண்டமானை இக்குழு சந்தித்து உரையாடியது·

மேற்படி. முன்னணித் தலைவர் ஆர். எம். ராமச்சந்திரன் செயலாளர் நாயகம் எம். ரவீந்திரபாண்டியன் ஆகியோர் அமைச்சர் தொண்டமானை சந்தித்தனர்.

அச்சந்திப்பின் போது இலங்கையில் அகதிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க இந்திய அரசாங்கம் மற்றும் தமிழ்நாட்டு அரசாங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும்படி கோரினர்.

### போலீஸ் துன்புறுத்தல்

1983ம் ஆண்டின் பின் வந்தவர்களுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுக்க ஆவன செய்யும்படி அவர்கள் அமைச்சரிடம் தயவான கோரிக்கையொன்றை விடுத்தனர்.

அகதி முகாம்களுக்கு வெளியே உள்ளவர்கள் பொலிஸாரால் துன்புறுத்தல்களுக்கு இலக்காவதாக அவர்கள் தொண்டமானிடம் கூறினர்.

தமக்குரிய விசா காலாவதியாகி அவற்றைப் புதுப்பிக்காத காரணத்தால் பொலீஸார் அவர்களை துன்புறுத்துவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அகதிகள் பிரச்சினை பற்றி தாம் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

# இந்தியக் காந்தியும் ஈழத்துக் காந்தியும்

விடுதலைப் போருக்கு வித்திட்ட காந்தியின்
விடுதலைப் பாதையில் மூத்த எம் தலைவா
குரலிட்ட போதெல்லாம் கொடிதன்னைத் தூக்கி
வெறிதன்னை அடக்கி விரைந்துவந்தோம் பின்னே
வெள்ளையனை வெளியேற்ற வழிசொன்னர் காந்தி-சிங்கள
புல்லியரை வசக்கிட முறை கண்டார் செல்வா
உப்புச் சத்தியாக்கிரகம் தண்டி யாத்திரை என்று
தப்புக்கு முறை கேட்டார் அண்ணல் காந்தி
செப்பு மொழி உரிமைக்கும் செழுமை கொஞ்சும்
மண்ணுக்கும்
கச்சிதமாய் வாதிட்டார் தமிழ் ஈழக் காந்தி
காந்தி அண்ணல் கண்டதும் அடி உதை கொடுஞ் சிறை
ஈழக் காந்தி அண்ணல் கண்டதும் அடி உதையும்
கொடுஞ்சிறையும்

கைத்தறியில் சுதேசியம் வென்றார் காந்தி
முத்திரையில் மூடு திரை கிழித்தார் செல்வா
கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் புரிந்த இரண்டு
காந்தியரும் போட்ட விதை ஒன்று தான்
அகிம்சை வழிநின்றதெல்லாம் நன்றுதான்
பெரும் பான்மைப் பலத்தால் ஜனநாயகம் கண்ட
கொடுங்கோன்மை ஆட்சியின் கொடுமையில்
சிறுபான்மை இன உரிமைகள் சிறையென்னும் கூட்டிலே
படும் பாட்டை எண்ணி மனம் வெந்தவர்
ஒப்பந்தங்கள் பல செய்து கற்றுத் தந்த பாடங்கள்
வித்திட்ட சிந்தனையில் முளைத்தது ஈழ விதை
வட்டுக் கோட்டைத் தீர்மானம் வரைந்தது தமிழ் ஈழம்
ஒட்டு மொத்தக் குரலாக ஒலித்தது தமிழ் ஈழம்
வெற்றி வெற்றி என்று மக்கள் வாக்கிட்டதும் தமிழ் ஈழம்
எட்டியது வெற்றி என இறுமாந்த இளைய யுகம்
கொட்டியது தேளாகக் கொப்புளித்தது இரத்த வெறி
முட்டியது தமிழினத்தை முப்படையின் கொடுங்கரங்கள்
விட்டு விட்டுத் தொடர்ந்தது வேதனையின் குமுறல்கள்
எட்டி எட்டி எரித்தது இனவெறியின் கோரக்கனல்
கட்டியங்கூறிக் காலன் களத்தில் குதித்திடவும்
வெட்டிய மரம்போல் தந்தை வேதனையில் விடை
கொண்டார்
போட்ட விதை முளைத்ததையா பொய்மை வேடம்
நடுங்குதையா

காக்கும் கரங்களின்றிக் கலங்குகின்றோம் தனியனாக
நாட்டு மக்கள் திக்கொன்றாய் நாலு திசை வாழ்க்கையிலே
ஓட்டும் மீகாமனில்லா ஓடங்கள் போல் அலையினிலே
வாட்டும் துயர் தீர வழிகாட்ட வேண்டுமையா...

-தர்மஜா
திருச்சி

# ஓமந்தை, புளியங்குளம் மாங்குளம் பகுதி மக்கள் வெளியேற்றம்

## புலிகள் அனுமதி வழங்கும் நிலையங்களில் அதிகாலை முதல் நீண்ட கியூ

வன்னியில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டு வருவதால் வவுனியாவுக்கு அப்பாலுள்ள ஓமந்தை, புளியங்குளம், கனகராயன் குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் பிரதான வீதியின் இருமருங்கிலும் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர். இவ்வாறே மன்னார் பெரு நிலப்பரப்பு பகுதியிலுள்ள கிராமங்கள் பலவற்றில் இருந்தும் மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் படையெடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறியப் படுகிறது.

### இடப்பெயர்வு

வவுனியாவிலிருந்து வடக்கிற்கான தரைப்பாதையைத் திறக்கும் இராணுவ நடவடிக்கைக்கு பாதுகாப்புப் படைகள் தயாராகிக் கொண்டிருப்பதாக தோன்றுவதாலேயே மக்களின் இந்த இடம் பெயர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டால் தாங்கள் அதில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காகவே இந்த பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயருகிறார்கள்.

### வெறிச்சோடிய நிலை

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப் பரப்பில் விடுதலைப்புலிகளின் வடபகுதிக்கு வெளியே அனுமதி வழங்கும் அலுவலகங்களில் அதிகாலை 4 மணியில் இருந்து நீண்ட வரிசையில் நின்று மக்கள் குடும்பம் குடும்பமாக அனுமதி பெறுவதாகக் கூறப்படுகிறது. சூரியக் கதிர் ஒன்று இராணுவ நடவடிக்கையின் போது யாழ். மாவட்டத்துல் இருந்து இடம் பெயர்ந்த மக்களே பெருமளவு இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் பிரதான வீதியை அண்மித்த இரு பகுதியிலும் வசித்த மக்கள் வெளியேறுவதனால் இவ் இடங்கள் வெறிச்சோடி கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

மன்னாரில் இருந்து இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்ற அச்சத்தினால் இலுப்பைக் கடவை, கள்ளியடி, வெள்ளாங்குளம், முழங்காவில், நாச்சிகுடா ஆகிய பகுதிகளில் இருந்தும் மக்கள் தற்போது இராணுவக் கட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கு சென்று கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### யுத்த தளவாடம்

எல்லைப் பகுதியை நோக்கிப் பெருமளவு படையினர் நகர்த்தப்பட்டு வருவதாக வவுனியா வாசிகள் தெரிவித்தனர் என்றும் ரயில் மூலம் யுத்த தளவாடங்கள் வவுனியாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் நிறுவன தகவல்கள் கூறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# ஊமை விழிகள்

- எஸ். பீ. எஸ். ரமணீ மதியழகன் -
(இ. அ. முகாம், பழைய வத்தலக்குண்டு)

'மாதவி...மாதவி' என்று என் தாயார் கூப்பிட்டதும் தங்கை ஓடி வந்தாள்.

''ஏனம்மா...''

'ஏன்டி உம் புருஷன் வந்தானா ?'

''ஏம்மா மருமகன வந்தானாபோனானாஎன்றுசொல்வது மரியாதை இல்லேம்மா'' என்று நான் குறுக்கிட்டு அம்மாவை கண்டித்தேன்.

''டேய்...டேய் போடா பெரிசா பேச வந்துட்டான். ஒரு பிள்ளைய கல்யாணம் பண்ணிட்டோம். அவள எப்படியாவது கஷ்டப்பட்டு காப்பாத்தனும்னு நெனைக்காதவனெல்லாம் ஒரு மனுஷனு?...ம் ...போட்டு அனுப்பிய நகை நட்டெல்லாம் வித்து உடுப்பு தைக்கிறதும் குடிக்கிறதுமா செலவு செஞ்சிட்டு, இப்ப என்னடானா யாரோ பணம் கொடுத்து வெளிநாடு அனுப்புறார்னு கேள்வி பட்டு, எம் பொண்னு மாதவிய, வெளி நாட்டுக்கு அனுப்ப எல்லா ஒழுங்கையும் செய்து போட்டு வேலை வெட்டி இல்லாம நம்மளோட வந்து ஒட்டிக் கொண்டு இருந்தா என்னடா அர்த்தம்?'' என்று அம்மா கோபமா பேசினாள்.

எனக்கும் மனதுக்குள் வேதனையாகத்தான் இருந்தது. ஒரே தங்கை ஆசையா பாசமா வளர்ந்தவள். கல்யாணம் பண்ணி ஒரு பையனும் இருக்கான். அவனுக்கு 9 மாதம் தானாகிறது. இந்த நேரத்தில அவனை விட்டு போட்டு வெளி நாடு போறதென்றால், யாருக்குத் தான் கோபம் வராது. நான் எவ்வளவோ சொல்லியும் மாதவன், அது தான், என் தங்கையின் கணவன் கேட்கமாட்டேன்னுட்டார். இது எங்க குடும்ப விஷயம் என்று கூட சொல்லி போட்டார்.

''வெளி நாடு போறவங்க எவ்வளவு சித்ரவதைக்குள்ளாகிறார்கள். என்னென்ன கேவலமான முறையில் நடத்தப் படுகிறார்கள் என்பதைக் கேள்விப் பட்டிருக்கின்றேன். இருந்தும் என் தங்கையும் அதே இடத்துக்கு போறாள் என்றால் யாருக்குத்தான் மனச் சங்கடம் வராது. ஒரே வீட்டில் இரு பெண்கள் வெளி நாட்டுக்குபோனார்கள். மூத்தவள் எப்படியோ சமாளித்து இருந்து இரண்டு வருடம் கழித்து வந்தாள்.

இளையவள், ஒரு மாதத்தில் திரும்பி வந்து விட்டாள். கேட்டால், அது ஒரு தொழிலா. வர்றவன் போறவன் எல்லார்க்கும் பல்லை காட்டனும் என்று சுருக்கமா சொன்னது எனக்கு ஞாபகம் அடிக்கடி வந்தது. என்ன செய்வது வந்தவன் அப்படி என்று ஒரு பெரு மூச்சோடு இருந்து விட்டேன்.

பாஸ்போட் விசா எல்லாம் தயாராகி விட்டதாகச் சொல்லி கடிதம் வீட்டுக்கு வந்தது. மச்சான், தங்கையைக் கூட்டிப் போய் சென்னையில் தங்கி அனைத்தும் முடித்துக் கொண்டு வீடு திரும்பினார்.

ஒரு வாரத்தில் துபாய்க்கு போகப் போகும் தங்கையை நினைத்து வேதனைப் பட்டுக் பட்டுக் கொண்டிருந்தேன்.

சின்ன வயதில் அவள் அழும் போதெல்லாம் ''அழாதே பாப்பா அழாதே அம்மா இருந்தா பால் தரு வாங்க'' என்ற பாடலைப் பாடி தூங்க வைப்பேன். அந்த வயதில் அம்மா, வியாபாரத்துக்கு சந்தைக்கு போய் விடுவார்கள் அப்போது அவனைத் தூங்க வைப்பதற்காக இப்படித் தாலாட்டி தூங்க வைப்பது வழக்கம். ஆனால் இன்று என் தங்கை அவளே வெளிநாட்டுக்கு போய் விட்டாள். அவள் குழந்தையை அதே போல் தாலாட்ட வேண்டியுள்ளதே... என்ற வேதனை என் கண்ணில் நீர் வடியச் செய்தது.

**சிறுகதை**

''விஜயா, விஜயா''என்று என் அம்மா கூப்பிட்டது கேட்டு ஓடினேன்.

''டேய் அவள் வெளிக்கிட்டுட்டாள். போய் வழி அனுப்பிவிட்டு வா'' என்று என் அம்மாவின் கட்டளையை ஏற்று அவளை மச்சானுடன் சேர்ந்து வழியனுப்பச் சென்றேன்.

அவள் வானூர்தியில் ஏறி பறந்ததும், என் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. ஓ...வென்று அழுதுவிட்டேன்.

இப்போது வெளிநாடு சென்று ஆறுமாத காலமாகி விட்டது. அவளின் குழந்தையை அம்மாதான் கவனித்து வந்தார்கள்.

மச்சான் இடைக்கிடை வேலைக்குப் போனார். ஆனால் அவர் நடவடிக்கை ஒன்றும் சரி இல்லை. அவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு என்று கேள்விப் பட்டேன். இதைச் சுட்டிக் காட்டி குடும்பத்தில் தகராறு உண்டு பண்ண விரும்பவில்லை.

தங்கை அனுப்பிய கொஞ்ச பணத்தை வைத்து, ஏதாவது ஒரு கடையை ஆரம்பிக்கச் சொன்னேன். அவர் அதைக் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை. மோட்டார் சைக்கிள் வாங்கினார். T.V. ரேடியோ என்று ஆடம்பரப் பொருள்களை வாங்கினாரே தவிர பிள்ளைக்கு ஒரு தங்கச் செயின் கூட வாங்கவில்லை.

கொஞ்ச காலம் கடந்தது. தங்கை கடிதம் எழுதியிருந்தாள் அம்மாவுக்கு.

''எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை, ஏன் வந்தோமென்று வெறுப்பு இப்படியும் வாழனுமா என்று...'' இந்த வார்த்தை என்னை மிகவும் வேதனைக்குள்ளாகியது.

''அத்தானுக்கு கடிதம் போட்டால் ஒழுங்காக பதில் எழுதுவதில்லை. ஏதோவெல்லாம் எழுதுகிறார். பட்டினியாய் கிடப்பவனுக்கு எது கிடைத்தாலும் சாப்பிடலாம் என்ற எண்ணம் வருமாம். அதுபோல் அத்தானும் அவர் வாழ்க்கையும் திசை மாறி விட்டதாக உணர்கிறேன்'' என்று எழுதியிருந்தார்.

இந்த வரிகள் என்னை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. அவள் மனதில் எத்தனைத் துன்பங்களோ வேதனைகளோ அம்மாவும் என்ன நினைத்தார்களோ, நாளாக ஆக அவர்களும் 'மன நிம்மதி இல்லாலல் புலம்பத் தொடங்கினார்கள்.

பெண்களுக்கு வயது வந்து விட்டதே என்பதற்காக ஒருவனை நன்கு-அவன் குணாதிசயங்களை ஆராயாது கட்டிக் கொடுப்பது எவ்வளவு தப்பு என்றுசாடைமாடையாக என்னையும் குத்திக்காட்டினார்கள்.

நல்ல வேளை நான் திருமணம் முடிக்கவில்லை. இல்லை என்றால் என்னையும் ஏதாவது கோளாறு சொல்லியிருப்பார்கள்.

இப்படியாக கொஞ்சநாட்கள் கடந்தது.

ஒரு நாள் ''மாதவி இறந்து விட்டாள் உடல் அனுப்பப்படுகிறது'' என்று தந்திவந்தது.

எல்லோரும் பதறியடித்துக் கொண்டு சென்னை விமான நிலையத்துக்குச் சென்று இரண்டு நாள் தங்கி பிரேதத்தைக் கொண்டு வந்தோம்.

பெரும் கூட்டம் திரள் திரளாகக் கூடினார்கள்.

பேசாமல் இலங்கையில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகியிருக்கலாம். இங்கு வந்து சொந்த பந்தமில்லாத ஒருவனை அதுவும், அவள் அவனை விரும்பினாள் என்பதற்காக அவள் ஆசையைக் கெடுக்கக் கூடாதே என்பதற்காக பேசிக் கல்யாணம் முடித்து வைத்து இப்போ இப்படி கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டாளே என்று சொல்லி கண்ணீர்வடித்தேன்.

பல சடங்குகளுக்கு மத்தியில் பிரேதம் சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது. எல்லோரும் அவர் அவர் ஊருக்கு திரும்பினார்கள்.

நாங்கள் பட்டத் துன்பத்தை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தோம். அவள் விட்டுச் சென்ற குழந்தையைக் கூட மச்சான் சட்டைப் பண்ணுவதில்லை.

குழந்தை மட்டும் அம்மா, அப்பா, மாமா என்று அழ ஆரம்பிக்கும் ஏக்கத்துடன் அவனை வாரி அணைத்து தோள்மீது சாய்த்து தாலாட்டினேன்.

பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதால் எத்தனை வேதனை! புருஷன் வேறு வழியை நாடுகிறான். பிள்ளையோ மாற்று வழிக்கு ஆளாக்கப்படுகிறான் பெற்றோர்களோ, பிள்ளையின் நிலை குறித்து புலம்புகிறார்கள். என்ன வாழ்க்கை இது? என்று என் உள் மனம் கேள்விக் கணைகளை எழுப்பிக் கொண்டிருந்தது

என் தங்கையின் போட்டோவை நோக்கினேன். அவள் கண்கள் என்னோடு பேசுவதுபோல் தெரியும். இப்போது ஒன்றும் பேசாமல் ஊமை விழிகளாக இருந்தன. என்ன பேச? எல்லாம்தான் முடிந்து விட்டதே !

# தந்தை செல்வா நூற்றாண்டு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள்தமிழர்களிடையே இருந்துள்ளார்கள். எனினும் அவர்களில் எவருமே செய்யாத ஒரு சாதனையாக தமிழினத்தை ஒன்றுபடச் செய்ததுடன், தமிழீழம் மலர சாத்வீக வழியைக் காட்டினார். மக்கள் குரலை அரசுக்கு உணர்த்தினார். நாடாளுமன்றத்தில் தமது கருத்தை வலியுறுத்தினார். ஆனால் சிங்கள அரசு மதிக்காத நிலையில் அறவழியில் நம்பிக்கையிழந்த இளைஞர்கள் பலர் வன்முறையை வழியாகத் தேர்ந்தெடுத்தனர் தந்தை செல்வா பிரகடனப்படுத்திய தமிழீழத்தை எப்படியும் அடைந்து விடலாம் என்று இளைஞர்கள் நம்பினார்கள்.

ஆனால், தமிழர்கள் அனைவரும் தந்தை செல்வா ஒன்றுபடுத்தியது போல்இன்று பிளவுபட்டுக் கிடக்கும் இளைஞர் குழுக்களை ஒன்றுபடுத்த எவரும் இல்லை என்பது வேதனைக்குரிய விடயம். பகைவரை அழிக்க வேண்டிய இவர்கள் தங்களுக்குள் பிளவு பட்டுப் பேரழிவை ஏற்படுத்தி கொண்டார்கள்.

### *தமிழர்கள் ஓரணியில் திரள வேண்டும்*

ஒரு நாடு வேறு நாட்டின் மீது பகை கொண்டு படையெடுக்கும்போது கூட ஏற்படாத அழிவுகள், சிதைவுகளை சொந்த நாட்டில் தமிழரை அழிப்பதற்கு சிங்கள அரசு மேற்கொண்டுள்ளது. இதிலிருந்து தப்பி, உயிர் பிழைக்க தமிழர்கள் பல நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களது அவலநிலை நீங்க அனைவரும் ஒன்றுபட்டு ஓரணி திரள்வதே தந்தை செல்வா விழாவின் நோக்கமாக அமைய வேண்டும்.

இவ்வாறு, பேராசிரியர் அன்பழகன் குறிப்பிட்டார் இவ்விழாவில் கலந்துகொண்ட தலைவர்களுக்கு ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் சார்பில் மாலைகளும் சால்வைகளும் போர்த்தப்பட்டன. கழக இசைக் குழுவினரின் நன்றி தெரிவிக்கும் பாடலுடன் இரு நாள் விழாக்களும் இனிதே நிறைவெய்தியது.

(இங்குதரப்பட்டவைபேச்சுக்களின் சுருக்கம்தான் முழு உரைகள் இடமிருப்பதைப் பொறுத்துப் பின்னர் வெளியிடப்பெறும். —ஆசிரியர்)



பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் இல. கணேசன் முதல் நாள் நிகழ்ச்சியில் நிறைவுரையாற்றுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com





ஈழத்தந்தை செல்வா இலங்கை நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரைகளின் முதல் தொகுதி நூலை தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் வெளியிட, கழகச்செயலாளர் செல்வி சூரியகுமாரி முதல் பிரதியை பெற்றுக் கொள்கிறார். அருகில் முனைவர் அ.ரு. கோபாலன் உள்ளார்.

# இந்தியா தலையிடுக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சிங்கள ராணுவம் செல்கிற பக்கமெல்லாம் அழிவும் அட்டூழியமும்தான் நடக்கின்றன.

உள்ளபடி புலிகள்தான் பிரச்சினை என்றால், புலிகளிடமிருந்து கைப்பற்றிய யாழ்ப்பாணத்தை தமிழ்ச் சிவிலியன்களின் நிர்வாகத்தில் அல்லவா விட்டிருக்க வேண்டும்? ஆனால் அங்கே ராணுவத்தின் அடக்குமுறையல்லவா நடைபெறுகிறது! அரச அதிபர் உட்பட சிவில் அதிகாரிகளை ராணுவமல்லவா ஆட்டிப்படைக்கிறது!

### சிங்கள பௌத்த இனவெறிப்படை

யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டிருக்கிற - நிலை கொண்டிருக்கிற ராணுவத்தினருக்கு உணவு மற்றும் உபயோகப் பொருள்களைத் தடங்கலின்றிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தானே இப்போது வன்னிப் படையெடுப்பை ராணுவம் நடத்திக் கொண்டிருக்கிறது!

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையும், இனங்களையும், மதங்களையும் கொண்ட எந்த நாட்டிலாவது ராணுவம் ஒரே மொழி, ஒரே மதத்தைக் கொண்டோராக மட்டும் அமைக்கப்பட்டிருக்கிறதா? இலங்கையில் தமிழ் மொழி பேசுவோர் நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கினராக இருந்தும்; இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தோர் கணிசமாக இருந்தும், சிங்கள மொழி பேசும் பௌத்த மதத்தைச் சேர்ந்தோரையே கொண்டதாக சிறீலங்கா ராணுவம் இருப்பது அதன் பச்சை வகுப்பு வாத இனவெறித் தன்மையைப் புலப்படுத்துவதன்றி வேறென்ன?

அந்த பச்சை வகுப்புவாத இனவெறி பிடித்த ராணுவத்தின் நடவடிக்கைகளைப் புலிகளின் பயங்கர வாதத்திற்கு மட்டுமே எதிரானது என்று வர்ணிப்பது உலகத்தை ஏமாற்றுவதன்றி வேறென்ன?

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை தமிழ் மக்கள் ஆதரிப்பதில்லை. ஆனால் சிங்கள ராணுவப் பயங்கரவாதம் தமிழின ஒழிப்புக்குப் புலிகளைச் சாட்டுச் சொல்வதையும் அவர்களால் ஆதாரிக்க முடிவதில்லை.

### தமிழ் ஒழிப்புப் படையெடுப்பு

ஏனென்றால், அவர்கள் வாதப்படியே புலிகள் அகற்றப்பட்ட இடங்களில் பொறுப்புகள் தமிழ்ப் பொது மக்களிடம் வழங்கப்படவில்லை. அங்கெல்லாம் தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூட முடியாத நிலையையே சிங்கள ராணுவம் தோற்றுவித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தையே எடுத்துக் கொள்வோம். அதை ராணுவம் கைப்பற்றியதும் அங்கே கோட்டையில் சிங்கக் கொடியை ஏற்றி சிங்கள இனத்தின் வெற்றி என்றுதானே அதைக் கொண்டாடியது!

ராணுவம் வெற்றி கொண்ட இடங்களில் எல்லாம் அங்கிருந்த தமிழ்ப் பெயர்களை அழித்து விட்டு சிங்கள பெயர்களைப் பொறிப்பது எதைக் காட்டுகிறது?

ஆக சிங்கள ராணுவத்தின் படையெடுப்பு புலிகளை ஒழிப்பது மட்டுமல்ல, புலிகளை ஒழிப்பது என்ற பெயரால் தமிழையும், தமிழ் மக்களையும் ஒழிப்பது என்றுதானே ஆகிறது!

### மக்கள் கொலை

இல்லையென்றால், இந்திய மீனவர்களையும் சிங்கள கடற்படை கண்மூடித்தனமாகச் சுட்டுத்தள்ளிக் கொண்டிருக்காதே! அவர்களும் தமிழ் பேசும் மக்கள் என்பதால் தானே சகட்டுமேனிக்குச் சுட்டுத் தள்ளுகிறது!

சிறீலங்காவின் தரைப் படையானாலும் கடற்படையானாலும், வான்படையானாலும் சிங்கள மயமாக இருப்பதால், தமிழர்கள் என்றாலே சாகடிக்கப்பட வேண்டியவர்கள் என்கிற மனப்பான்மையில் தான் அவர்கள் செயல்படுகின்றனர்.

எனவே, இந்திய முப்படைகளைப் போலக் கருதிக் கொண்டு இலங்கை முப்படைகளின் நடவடிக்கைகளை பாரபட்சமின்றி அதன் எல்லா மக்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளாக மதிப்பீடு செய்வதற்கில்லை.

அந்த முப்படைகளால் கொல்லப்படுவோர் அனைவருமே புலிகள் அல்லர் பெரும்பாலும் அப்பாவித் தமிழ்ப் பொது மக்களே ஆவார்கள்,

### இந்தியாவுக்கும் எதிரான செயல்

ஆகவே இந்த முப்படை நடவடிக்கைகளை, புலிகளுக்குஎதிரான நடவடிக்கைகள் மட்டுமே என்று சிறீலங்கா ஆட்சியினர் சொல்வதை இந்தியாவும் உலகமும் ஏற்கக் கூடாது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதையும் சேர்த்துப் பார்த்தால் இலங்கை முப்படைகளின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கும் எதிரான நடவடிக்கைகளாக இருப்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஆதலால் இந்தியா இதில் தலையிட்டு, தமிழ் மக்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கவும், இலங்கை இனப்பிரச்சினை தமிழ் மக்கள் மானத்தோடு வாழ்வதற்கு உரிய முறையில் தீர்க்கப்பட்டு, இந்தியாவில் உள்ள அகதிகள் தாங்களே விரும்பித் தாயகம் திரும்பவும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியாவின் செல்வாக்கு இதில் இருக்கக் கூடாது என்பதற்காகவே ஐரோப்பிய நாடு ஒன்றின் மத்தியஸ்தத்திற்கு சிறீலங்கா முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மாலைத் தீவில் 'சார்க்' மாநாடு நடந்த கையோடு, இந்தியப் பிரதமர் மாண்புமிகு ஐ. கே. குஜ்ரால் அவர்களை சிறீலங்கா குடியரசுத் தலைவர் திருமதி சந்திரிகா அவர்கள் சந்தித்துப் பேசிய சுவடு மறைவதற்குள், வன்னிப் பெருந்தாக்குதலை சிறீலங்கா ராணுவம் தொடங்கியிருக்க மாட்டாது. இந்திய மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டிருக்க மாட்டாது.

எனவே, இந்திய அரசும் தமிழக அரசும் மனிதாபிமான அடிப்படையிலும், இலங்கைத் தமிழ் மக்கள்பால் தமக்குள்ள தார்மீகப் பொறுப்பு அடிப்படையிலும், இந்திய மீனவர்களின் பாதுகாப்பு அடிப்படையிலும் சிறீலங்காவின் ராணுவரீதியான தமிழினப் படுகொலையை உடனே தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

# ஒரு குறளை உணர்வோம்

## உயிர் உண்ணும் கூற்று எது?

- அருகோ -

''கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள் மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று''

திருக்குறள் : 326.

பரிமேலழகர் : கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்—கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாளின்மேல்: உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது—உயிர் உண்ணுங் கூற்றுச் செல்லாது என்றவாறு.

''மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பர்'' என்னும் அறநூல் துணிபுபற்றி, இப்பேரறஞ் செய்தானும் கொல்லப்படான்; படானாகவே அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்தும் என்பார், 'வாழ்நாள்மேற் கூற்றுச் செல்லாது' என்றார். செல்லாதாகவே காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால், ஞானம் பிறந்து உயிர் வீடுபெறும் என்பது கருத்து.

இதனான், அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது

மணக்குடவர் : கொல்லாமையை விரதமாகக் கொண்டு ஒழுகுமவன் வாழ்நாளின்மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது என்றவாறு.

பிறவாமை உண்டாமாதலால் 'கூற்றுச்செல்லாது' என்றார். இது கொல்லாமையின் பயன் கூற்று.

பரிதியார் : கொல்லா விரதம் நிலைபெற்றவன் மேலே இயமன் வர அஞ்சுவான் என்றவாறு.

காளிங்கர் : கொல்லாமையாகின்றசிறந்த அறத்தினைத் தன்னிடத்து என்றுங் கொண்டு இடைவிடாது நடாத்துகின்றான் யாவன; அவனது வாழ்நாளமேல் சென்று அடராது மற்று ஏனை உயிர் உண்ணுங் கூற்றானது என்றவாறு.

டாக்டர் மு.வ. : கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின்மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செலமாட்டான்.

உயிரை உண்கின்ற கூற்றானது அதாவது சாவு கொல்லாமை என்கிற அறத்தைக் கடைப்பிடிக்கின்றவனை அணுகாது என்ற அடிப்படையில்தான் இக்குறட்பாவுக்கு ஏறத்தாழ அனைவருமே பொருள் கூறியுள்ளனர்.

''கொல்லாமையை அறமாகக் கொண்டவனுக்குப் பிறவாமை உண்டாதலால் கூற்றுச் செல்லாது'' என்ற மணக்குடவர் உரை மேற்கண்ட நோக்கில் பார்த்தால் மற்றவர்கள் உரையைவிடப் பொருத்தமாக இருக்கிறது.

ஆனால் உயிருண்ணும் கூற்று என்று இங்கே வள்ளுவரால் குறிப்பிடப்படுவது மனச்சான்றின் உறுத்தல்-கவலை என்றே கொள்ளப்பட வேண்டும் மற்ற உயிர்களைக் கொல்வதை வாடிக்கையாகக் கொண்டவனுக்கு அவனது மனச்சான்றின் உறுத்தல் அவனுடைய வாழ்நாள் முழுதும் அவனை உள்ளிருந்து கொன்று கொண்டே இருப்பதை. அதாவது அவன் உயிரை-நிம்மதியைத் தின்று கொண்டே இருப்பதைத் தவிர்க்க முடியாது.

கொல்லாமையை அறமாகக் கொண்டவனுக்கோ இந்த வேதனை இருக்காது. இதைத்தான் இக்குறட்பா மூலம் வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஏனெனில்,


''நெருநெல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை படைத்திவ் வுலகு''

என்று கூறி, யாராலும் சாவைத் தவிர்க்க முடியாது எனச் சாற்றிய வள்ளுவர், அதற்கு மாறாக எப்படிக் கூறுவார்?

படிப்பகம்

www.padippakam.com





அமைச்சர் மாண்புமிகு சற்குணபாண்டியன் முன்னிலையில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகநிறுவனர் சந்திரகாசன் தமிழகத்தில்தஞ்சமடைந்துள்ள இலங்கைத்தமிழ்அகதி மக்களுக்கு கழகம் ஆற்றிவரும் சேவைகளை விளக்குகிறார்.

# மற்றொரு வேவு விமானம் வன்னி பிரதேசத்தில் பறக்கையில் மர்ம மறைவு

இலங்கை பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான வேவு பார்க்கும் விமானமொன்று (விமானி இல்லாமல் இயங்குவது) இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னி பிரதேசத்திற்கு மேலாக பறந்து கொண்டிருக்கையில் காணாமல் போய்விட்டது.

வவுனியா விமானத்தளத்திலிருந்து காலை 9.30 மணியளவில் கிளம்பிய இவ் விமானம் வன்னி பிரதேசத்திற்கு மேலாக நீண்ட நேரம் வட்டமிட்டுத் திரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்ரேல் தயாரிப்பு

அதன் பின்னர் இவ்விமானம் வவுனியா விமானத் தளத்துடனான தொடர்பை இழந்து விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விமானத்திற்கு நடந்த கதி என்னவென்பது குறித்து பாதுகாப்பு அதிகாரிகளினாலேயே உடனடியாக தகவல் எதனையும் அறிந்துகொள்ள முடியாமலிருந்தது.

விமான நிலையத்தின் கட்டுப்பாட்டை இழந்ததும் அவ்விமானம் தரையில் வீழ்ந்திருக்குமென நம்பப்படுகிறது.

ஆட்கள் எவருமே இல்லாமல் 'றிமோட் கொன்ட்ரோல்' கட்டுப்பாட்டுடன் இயங்கும் இந்த விமானம் இஸ்ரேலிய நாட்டுத் தயாரிப்பு ஆகும்.

## மூன்றாவது இழப்பு

ஆகாயத்தில் மிக உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் போதே தரையில் உள்ள இடங்களை ரெலிஃபோகஸ் லென்ஸ்' உதவியுடன் வீடியோ படம் பிடித்துக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கும் நவீன தொழில்நுட்ப கருவிகள் இவ்விமானத்திற்குள் உள்ளன.

இலங்கை பாதுகாப்புப் படை இத்துடன் மூன்றாவது உளவு விமானத்தை (விமானி இல்லாதது) இழந்துள்ளது.




அன்புள்ள ஆசிரியரே!

"தந்தை செல்வா நூற்றாண்டிலாவது தமிழர் கைகள் இணையுமா" என்ற முதற்பக்கக் கட்டுரை பிரமாதம். இந்தியாவின் புதிய பிரதமர் குஜ்ராலுக்கு வாழ்த்துக் கூறியதோடு "இலங்கை இனப் பிரச்சினையின் ஆழ அகலங்களை நன்குணர்ந்த அவர், தான் தலைமையமைச்சராகவே ஆகியிருக்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிரந்தரத் தீர்வைத் தேடித் தரவேண்டும்" என்று கூறியிருப்பது பொருத்தமானது.

தே. மரியசூசை, வேதாரண்யம்.

"மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தம் சிங்களக் கட்சிகளிடையே ஒற்றுமையை உருவாக்கி, தமிழர்களை மேலும் வஞ்சிக்க உதவாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்ற ஆசிரியத் தலையங்கம் அருமை

கே. கே. முத்தையா, காரைக்குடி.

"நங்கை உணர்த்திய நாட்டுப்பற்று" என்ற சிவாவின் சிறுகதை பாராட்டும்படி இருந்தது. ஆனால் அதற்காகப் போட்டிருந்த படத்தில் எவ்வளவு பெரிய நெற்றிப்பொட்டு! அப்படி ஈழப் பெண்கள் யாரும் வைத்துக் கொள்வதில்லை.

டி ஸ்டெல்லாமேரி, திருச்சி-3.

கவிதைச்சரத்தில் D. ரோய்ரோச் எழுதியிருந்த கண்ணீர்க் கடிதம் நெஞ்சை உருக்கியது. அரபு நாட்டுக்கு அனுப்பப்படுகிற அபலைப்பெண்ணின் மனவுணர்வை அப்படியே படம் பிடித்திருந்தார்.

என். ஆர். நிர்மலா, வேலூர்.

தகவல் தொடர்பு-தலைமைத்தவப் பயிற்சி பற்றிய கவிதைகளைப் போட்டு அசத்தி விட்டீர்கள். டாக்டர் திலானியின் கட்டுரையும், சித்திரா தேவசகாயத்தின் சொற்சித்திரமும் நன்றாக இருந்தன.

வி. ஆர். மனோ, கோலை-2.

புலித்தோல் போர்த்த பசு பற்றி அருகோ கொடுத்த விளக்கம் நன்று. சிங்கள அரசு எடுத்த செல்வா நூற்றுண்டு விழா பற்றி சுப்பையரின் விளாசல் அற்புதம்.

ஏ. தேவநாதன், மதுரை-1.




யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.

சோகவி செல்வநாதன்
தோப்புக்கொல்லை

கேள்வி : இந்திய மத்திய அரசில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் ஈழத் தமிழனுக்கு நல்வழி பிறக்குமா?

பதில் : நம்புவோம் நல்லது நடக்கட்டும் விரும்புவோம் விடிவு பிறக்கட்டும்!

கே : இலங்கை இனப் பிரச்சினையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அராபாத் சமரசம் செய்யத் தயார் என்று கூறியுள்ளாரே?

ப : ஆனானப் பட்ட இஸ்ரேலே சமரசத்திற்கு வந்து விட்டதென்ற நம்பிக்கையில் அவர் அப்படிக் கூறியிருக்கிறார். ஆனால் சிங்கள இனவாதிகள் தமிழருக்கு எதையும் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை அவர் எங்கே அறியப்போகிறார்!

S.P.S. ரமணி-வதிலை

கே : ஈழத்திலிருந்து அகதிகளாக வந்த குடும்பங்களுக்கு ஓரிரு வருடங்கள் கள் பாய், போர்வை, பானைகள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகு அரசு இது பற்றிக் கவனிப்பதில்லையே ஏன்?

ப : ராஜீவ் படுகொலையின் அதிர்ச்சியிலிருந்து முற்றாக மீளும் வரை இக் கவனிப்பின்மை நிலவத்தான் செய்யும்! அகதி மக்களின் கட்டுப்பாடும், ஒற்றுமையும், ஒழுங்கும் தான் இந்திய மத்திய-மாநில அரசுகளின்பால் மீண்டும் கரிசனையை உண்டாக்கக் கூடியவையாகும்.

வேம்பையன்-செங்கற்பட்டு

*கே : தமிழ் மக்கள் மீதான முப்படைத் தாக்குதல்களை முடுக்கி விட்டுக் கொண்டு, சமாதானத்தைப் பற்றி சந்திரிகா பேசுவது எதைக் காட்டுகிறது?

ப : உலகத்தை முட்டாளாக்கப் பார்க்கும் உதாசீனப் போக்கை?

# இரத்தம் சேமிக்கும் உபகரணம் இன்றி 22 நோயாளர் மரணம்

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் இரத்தத்தைச் சேமித்து வைக்கத் தேவையான உபகரணங்கள் இல்லாததால் இரத்தம் தேவைப்பட்ட நோயாளர்கள் 22 பேர் கடந்த மாதம் மரணமாகியுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இரத்தம் சேமித்து வைக்கக் கூடிய வசதிகள் இருந்திருக்குமானால் இந்த நோயாளர்களை காப்பாற்றியிருக்க முடியும். இறந்தவர்களில் இருவர் பிரசவத்திற்காக வந்திருந்த கர்ப்பிணித்தாய்மார்கள். ஏனையோர் குருதிச்சோகையினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின.

இது இவ்விதமிருக்க கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் கடந்த 12-ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான ஐந்து பொதுமக்களின் இருவரது உடல்கள் உறவினர்களால் மீட்கப்பட்டு தகனம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் கண்டி வீதியைச் சேர்ந்தவரும் இடம் பெயர்ந்து வந்து ஸ்கந்தபுரத்தில் வசித்து வந்தவருமான சின்னராசா குமரேஸ்வரன் (வயது 18) ஆனந்தன் ஜெகதீஸ்வரன் ஆகியோரது உடல்களே உறவினரால் மீட்கப்பட்டு தகனம் செய்யப்பட்டன.

இதேவேளை மின்னல் தாக்கி ஓமந்தை கொந்தக்காரன்குளம் பகுதியில் ஆறு பிள்ளைகளின் தந்தையான வேதேவராசா (வயது 48) என்பவரும் வவுனிக்குளத்தில் ஒருவரும் பலியாகினர்.

வன்னி பகுதியில் இடையிடையே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்கிறது.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, SaltColony, Ist Street., IIIrdFloor, Egmore, Chennai-600008
Printed at Kuralnery Achegam. Chennai-94

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை

படிப்பகம்